1630

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான
# மஹத்வசுகத்வம்.

OF THE REGISTRAR
22 SEP 1927
MADRAS

இஃது
சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமைத்தெய்த்துக் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுஞ்ஞான விலாசி
சபாபாலசிங்க கோளரியும்,
சென்னைத் திருமயிலை வடகூர இராயப்பேட்டை
அருட்கவி
இ ஷ. பா. சுந்தர காலமெச நியத்பெயரணைர்தன்
" சிவருளப்பாதேசியாரென்றும் "
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

கையோப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேட்டை
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

47 - வது ஜெயந்தின திருப்பணியாக கலியுகாப்தம்
5028 க்குச் சரியான தமிழ் அக்ஷய ஞு பங்குனி மீ 3உ
...வாய் சந்நிதியில ஷெ தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது

—0;0—

1927 ஞு மார்ச் மீ 16உ

Q23'.38.2111
N27.
125268

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான மஹத்வ சுகத்வம்.

இஃது
சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச
சபாப்ரசங்க கோளரியும்.
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
கி. ஜ. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பரதேசியாரென்னும்"
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேட்டு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

)(

47 - வது ௵த்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5028 க்குச் சரியானத் தமிழ் அக்ஷய ௵ பங்குனி ௴ 3 ௳
சுவாமி சந்நிதியில் ஷடி தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது

0§0

1927 ௵ மார்ச் ௴ 16 ௳







உ

சிவமயம்




திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான
# மஹத்வசுகத்வம்.

## விநாயகர் வணக்கம்.

### சோடசமாலை.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் - நட்டராகம்.

பூமருவுஞ் சகலவுயி ரனைத்தினுளு முயிராய்ப்
   பொருந்திவினை யாடற்செயும் புனித பரத்துவனே
ரோமருவு நிட்டையினிற் காணுஞ்சுட ரொளியே!
   நிரதிசயா னந்தமெனு நித்தியாப ரோட்சிதனே!
நேமருவுந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
   சிவஞான மஹத்வ சுகத்வமெனுஉ நூற்பணிக்க
பாமருவு மோம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
   பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (க)

அணியார்ந்த வைங்கரமா லைங்தொழி லோச்சிடுமெம்
  மாதிபனே ! சோதிநிறை நீதிசுளோ தரிய
மணியார்ந்த சுபவடிவே ! சுத்தமனத் தவாகண்
  வணங்கவரு மற்புதனே ! மாசிலா மணியே
திணியார்ந்த திருமயிலை ஸ்ரீ கபாலீசனின்மேற்
  சிவஞான மஹத்வ சுகத்வமெனூஉ நூற பணிக்க
பணியார்ந்த வோமப்ரணவ சிவவோம் விநாயகனே !
  பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (உ)

மன்னுபுகழ் தேவரண்டர் மாலயனிந் திரரும்
  வானைமல் மஹனியருஞ் சித்தர்களு முத்தர்
நன்மைபெற நாளுமற வாதுதொழு மண்ணலே
  நமபினவர் நம்பியெனு நம்பனே நம்பியர்சூழ்
சின்மயனே ! திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
  சிவஞான மஹத்வசுகத் வமெனூஉ நூறபணிக்க
பன்மறைசொல் ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே !
  பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (ங)

அகரவுக ரமுமகர மான தனி முதலே!
  அகண்டபரி பூரணமா யமர்ந்துநடம் புரியுஞ்
சுகவுருவே ! யகமகிழுந் தொண்டரிரு தயத்திற்
  றலங்குஞ்சுழு முனைவடிவே தத்திய நித்தியனே !
செகம்பணியுந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
  சிவஞான மஹத்வசுகத் வமெனூஉநூற் பணிக்க
பகரரிய வோம்ப்ரணவ சிவவோம் விநாயகனே !
  பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (ச)

சித்திபுத்தி யவையருளி செழுங்கலையுந் தந்து
  செப்பரிய வரமுதவுந் தெய்வமெங்ங னுளர்காண் ?
அத்திமுகத் துடனெழுந் தமரர்க் கிடுக்கண்செய்த
  வசுரன்வலி யொடுக்கியவண் மீத்ரோ சணித்த
சித்தமென்னே ? திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
  சிவஞான மஹத்வ சுகத்வமெனூஉநூற் பணிக்க
பத்திநிறை ஓமப்ரணவ சிவவோம் விநாயகனே!
  பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (ரு)

அருட்சுடரே ! வகிலமெலா மானமுகந் தன்னை
  யறிந்தவர்க ளடிபணிந்தா ரர்ச்சனைகட் புரிந்தார்

இருட்கடலி லிறங்கிசன்ம மெய்தினர்க ளறிந்து
யேத்தவல்லா ரிலையதனு லெங்ஙனுண்மை விளங்கும்
தெருளோங்குந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பருணிதர்சொல் ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (சு)

ஆசையெனும் பாசமற்று வைம்புல வேடுவர்க
ளசடுநிலைறச் செயலற்று வகமகிழ்ந் தந்தரங்க
பூசைமிகுந் தறிவெனுஉம் பொறியிற் சுடரேத்தி
பூரண வானந்தமதிற் பகுந்திருப்பர் நல்லோர்
தேசுயருந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பாசமறு ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (எ)

ஓங்காரத் தனிவடிவே! வுலகனைத்து மதனு
ளொடுக்கமென்ற வுளவறிந்தா ருமையானு ரெனவே
நீங்காத நிட்டைநிலை நின்றவர்க ளுரைத்த
நியமமொழி யுணர்ந்தவர்க ணீங்குவரோ? நீங்கார்
தீங்கனியே! திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பாங்கருளு மோமப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (அ)

அகமெனுஉங் கோயிலதி லறிவெனுஉஞ் சுடர்கொண்
டன்பெனுஉந் தூபதீப மைம்புலன் படையலாய்
பகரரிய தீர்த்தக்கண்ணீர் பாமாலைப் பூமாலையாய்
படைத்தவர்க்கு வேறுதவம் விரதமும் வேண்டுவதோ?
திகழ்பவனே! திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பகலவனே! ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (கூ)

ஆனதெலா மைங்கரமா மைந்துதொழி லாகு
மவைதானே தேவரைவ ரைம்பொறி வைந்தெழுத்து
மோனமுகத் தாலொடுங்கு ஞானவுளந் தன்னுல்
முழுதுமுள்ள படிதெரிந்தோர் மூழ்கினர் முத்திநிலை

தேனமிழ்தே! திருமயிலை ஸ்ரீகபாலீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பானுவெனு மோம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதிபேநின்பூம் பாதநம நமஸ்தே. (௰)

மாமணியென் றுபிரானைத்து நாதபோத மாகி
வணங்கினவர் வினையனைத்துங் களைந்து வாதரிக்குந்
தூமணியே! சொல்லரிய சுகந்தரு மமலனே
தூண்டாத மணிவிளக்கே! பிறப் பிறப்பிலானே
தேமணியே! திருமயிலை ஸ்ரீகபாலீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பாமணியே! ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (௰க)

சீரிலங்குஞ் செழுங்கலையே! தீண்டாத் திருமேனித்
திகழ்வடிவே! மறைமுடிவே! தேவர்க்கெலாந் தலைவ
காரிலங்கும் வெய்யவினைக் கடலதனைக் கடந்துக்
கருதினவர்க் காதரவே கருணைகற் பகமே!
தேரிலங்குந் திருமயிலை ஸ்ரீகபாலீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பாரிலங்கு மோம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (௰உ)

புண்ணியஞ்செய் தவர்களெலாம் போற்றுமொரு கரந்தார்
பொன்னுட்டிற் கருகரானுர் புனிதநிழ லடைந்தார்
எண்ணியதெல் லாம்வினைக்கேயீபெட்டிங் கிளைத்தோ
ரென்போலொரு பேதையெங்ஙனுளரோயெங்கு மிலைமெய்?
திண்ணியர்சூழ் திருமயிலை ஸ்ரீகபாலீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க
பண்ணிசையாம் ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (௰ங)

நலமுணர்ந்து மனம்வாக்குக் காயமதொன் றுகி
நாட்டம்விடா தேட்டமுளார் சேட்டைகளோட்டினரா
விலகுமாயை யவையொழித் தென்றுமொரு படித்தா
யிருக்குநிலை யருட்செய்திடி லேழையிவன் பிழைப்பேன்
திலகமெனத் திருமயிலை ஸ்ரீகபாலீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனுஉநூற் பணிக்க

பலவுருகொள் ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (மச)

வரமேந்தி வாழ்வடைந்தார் மலரடியை வணங்கி
வாழ்த்திதொழுங் கருணைச்செய்தா லன்றுசன்ம மொழியுஞ்
சரணடைந்தா ரெவரிழிவாஞ் சாக்காட்டி னுழைந்தார்
சாட்சியமே திலையிவைமெய் சதுர்முகனும் பிர்மன்
சிரமேந்துந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனூஉநூற் பணிக்க
பரம்பொருளே! ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (மரு)

அடியவர்கட் கடிமைசெய் தவரன்பிற் கருகனு
யாசித்து பூசைசே யடிமை சிவப்ராகாசன்
மிடியகன்று நலம்பெறவே நாற்பத்தேழாண் டதுவாய்
விளம்பிதொழுந் துதிசரண மாலையணிந் தகவி
செடியகற்றுந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்மேற்
சிவஞான மஹத்வசுகத்வ மெனூஉநூற் பணிக்க
மடிரகற்றும் ஓம்ப்ரணவ சிவவோம் விநாயகனே!
பரமதயா நிதியேநின்பூம் பாதநம நமஸ்தே. (மசு)

——0——

## நூல்.

காப்பிய வெண்சேந்துறை.

——*——

சருவமுந் தானுய் நின்று தழைத்திடுஞ் சங்கரனை
அருட்டரு மண்ணலை யதிதப் பழம்பொரு ளரனவனை
கருணையங் கடவுட் கபாலீசன் றுதிச்சீர் கணித்திடுவா
மிருவினை சனனக் கடற்கடந் தின்ப மெய்திடவே.

——)(——

## ஆசிரியம்.

——*——

மணிநிறை சகல வாய்மையுந் தூய்மையுந்
திணிநிறை தெய்வச் சீர்மையும் நேர்மையும்
அணிநிறை தேவர்க ளனந்த வுருக்குளே
பணிநிறை கடவுட் பரசிவ முதலென

மறையுடன் சுருதி மஹரிஷியர் வானவர்
நிறைநிறை வாக நின்றுளங் கசிந்து
யிறைவ னிவனலா லெவருமின் றெனவே
குறைக ளகன்றிடக் கும்பிடும் வண்மை
யுடையவெம் பெருமா னுண்மையின் படியே
தடைப்படா முத்தி தந்தரு டயாநிதி
விடையெனு மால்மிசை வேண்டினோர்க் கருடர
யிடப வாஹனரா யெழுந்தரு ளீச்சுரன்
மன்னுமெய்ஞ் ஞான வாழ்வதை வழங்கி
நன்மையிற் சேர்த்திடு நடுநிலை நாயகன்
இன்பமுந் துன்ப மிறப்பும் பிறப்பு
மென்ப திலாது யியாவினுங் கலந்து
தனிப்பாஞ் சுடராய் சத்துசித் தானந்த
மெனுமூ வகைக்கு ளிருந்தா சுஞற்றி
கனியினு ளினிப்பாய் கனகத்து ளொளியாய்
தனேநிக ரொருபொரு டானெங்கு மிலதா
யெழின்மலி நாத னெவைக்குந் தலைமையன்
பழிபாவ நோய்பிணி பகரரும் பலயிட
ரிழிவினி லணுகா தெங்ஙனு நிலவி
அழிவிலாப் பதவி யண்டினோர்க் கீபவன்
சருவ லட்சணமுந் தானது பொருந்தி
ஒருவிடா வகையா யுளங்கண் டாதரிக்கும்
பெருமையன் பிஞ்ஞகன் பேரறி வாள
குருகண் டேத்திட வுருகொண்டு நின்றவன்
பலகோடி நாமம் பரவிடப் பணிப்பினு
மிலதுமா யுளதுமா யிருந்து மிராதவன்
சலத்தினுட் பலசிவன் றழைத்திடு மாப்போ
லுலகுட னுயிரொடு வுகந்து வாதனைத்தி
ரண்ண லாதித்த னளவு படாத
யெண்ணருங் குணமெலா மினிதெண வருளி
கண்ணி னுளொளியெனக் கலந்த மெய்ப்பொரு
ளெண்ணமற் றவர்பா லிருந்து சுகிப்பவன்
சகச நிட்டையினுற் றன்னை மறந்து
சுகிதுகி யென்றத் தொந்தங்க ளில்லா
திகத்தும் பரத்து மெவைக்குங் கலந்திலா
தகைமைய ஞன சம்புவே சத்துவ

வுத்தம நெறியினுக் குகந்துட் கலந்து
சித்தமே சீவனாய் சீவனே சிவமா
யெத்தவ மெய்தின ரெனினுமத் த்வம்போ
லத்தவ நலம்பொல மருள் வநுக்ரஹஞ்
செய்பவன் மும்மலச் சேட்டையாங் காட்டை
யையவே புடைத்து ஞானமுன் மோன
முய்த்வ ருய்த்து வுறவது கொண்டு
மெய்யழி யாத் விரதமுஞ் சரண்டருங்
கடவுட் கடத்துளே காண்பவன் காண்பவர்
திடசிவேக நிறை செறிந்துள்ஞ் சேர்பவன்
தொடர்புறு மாய்கைச் சூதெலாந் தெரிந்
திடர்படா வகையொழிந் திருந்துமெய் நிறைவித்
கலந்திடி லன்று கன்ம நசிக்குங்
குலம்பல குறைத்திடுங் கோணல்க ணீங்கும்
புலனவை யொடுங்கும் புத்தியி னிலக்குஞ்
சிலபோ னிற்குந் திறனது வாய்க்குந்
தனித்துவ மான தத்துவத் துள்ளே
யினிதென வுறவுகொண் டிருக்கு மிடமறிந்
தென் துன தெனுங்கருத் தென்பதங் கில்லா
மனத்துற வதுவே வனத்துற வதினுஞ்
சிறந்ததென் றெண்ணுஞ் சிந்தையுஞ் சிந்தை
நிரந்தர மாக நெறிசொலுங் குருவருட்
பிறந்திடிற் சனனப் பேய்க்கா டழிந்திடு
மிறந்து பிறந்திடு மிடுகோ டெரிபடும்
இந்த வழிகண் டென்று மொன்றுமாய்
பந்த பாசமிலா பரம ஞானிகளின்
சுந்தர வுளமதிற் றுலங்குஞ்சம் பூரணன்
மந்த மதியினுண் மறைந்து நிற்பவன்
கருணையன் கருத்துட் கலந்தி கர்த்தன்
விருப்பும் வெறுப்பும் வேண்டிலான் வேண்டுவார்
கருத்தினுட் காண்கிலா கங்கை வேணிய
னொருவுரு பலவுரு வுளதென யிலதென
சொன்முடி வில்லா சுயம்பிர காசன்
பன்மலற யொன்றாய்ப் பலிப்பவன் பலித்து
அன்னவர் வேண்டற் காசித்து பூசைகொண்
டின்பவீ டருளி யென்றுங் காப்பவன்

ஐம்பொறி வாதனை யனைத்தையும் நீக்கி
அம்புசே ரிந்தரை வாழ்க்கையைத் துறந்து
சம்பிரம ஞானச் சதோதயம் பார்த்து
ஐம்பத் தோரெழுத் தவையைந்து மொன்று
யாக்கும் வலிமையு மருடந் தருளினு
ஞேக்கு நோக்கமு நோக்கியப் பார்வை
தேக்கிடிற் றெளிந்து தெரிவுந் தெரிதரு
மாக்கமும் வண்மையு மனுபவித் தவர்கள்
வாசிவா சிவவென வாசியுண் வாங்கி
நாசி முனையி னடுவேட்ட மதிலே
ரேசித்து பூரித்து ரேசையுட் கும்பித்து
மாசற்று நிற்பார் மஹான்களென் றுலகெலாம்
போற்றிடும் பெருமையும் பூரண வமிழ்தமுஞ்
சாற்றுங் குண்டலி சத்தி மனோன்மணி
மாற்றிலா ஞான வளந்தர மௌனியா
யாற்றலின் றருந்தி யானந்தங் கொண்டவ
ரன்றியூழ் வினையெனு மழிவுட லெடுத்து
நன்றியை மறவா நாய்க்குங் கேடா
யென்று மிறவா திருப்போமிவ் வாழ்வு
பொன்று நம்முடன் பொருந்திடு மெனவே
மனப்பாற் குடித்து வாய்ப்பக்த ரிட்டு
சினமெனும் பேயை தேவியாய்க் கொண்டு
யினத்தை நசிக்கு மெரிபுழு போல
கனத்தை நினைத்து காலங் கழித்து
போனது நாட்கள் பொய்யல மெய்மெய்
ஆனதறிந்து அறிவினுட் கூடி
தானமுந் தவமுந் தகைமையாய் முடித்து
ஞான வாழ்வுதரு நாதன் மலரடி
சிந்தத முள்ளந் தன்னில்வைத் தேத்தி
யெந்தையே யிறைவனே யீசனே யேழை
மைந்தனை யாதரி மயானம் போகுமுன்ஞ்
சுந்தர திருவடித் துணையலா தில்லெயென
கண்கசிந் தழுது கைகுவித் தேத்தி
பண்ணிசைப் பாடி பக்தர்பாற் சேர்ந்து
விண்ணவர் மண்ணவர் வேண்டி வந்தனைசெய
யெண்ணிலா வரந்தந்த யிறைவனே வித்தகா!

சமரச குணமுடன் றத்துவ மாய்ந்து
வாமரும் பகிரதி யானந்த சாகரம்
நமசிவாய வென நாளுஞ் சிந்தித்து
கமழுமெ யன்பிற் கட்டுபட் டொழுகி
பண்ணியஞ் செய்தோர்ப் பேரற்றியே யணியும்
வெண்ணீ றிடடு விஞ்ஞையுட் பெருகி
அண்ணலே சிவசிவ ஹரஹர வெனவே
நண்ணிஓம் சிவவென நமஸ்கரித் தினிதுற
மெய்வாழ் வடையும் விஞ்ஞை பெற்றிடின்
வையகம வானகம் வணங்கும் வரமது
வுய்திடி லெப்பொருளு மொருமித மாகும்
ஐயா திடலு நமனெனு மரணந்
தீண்டா தொருகா நீண்டிடின் விலகும்
மாண்டுப் பிறக்கின்ற வசனங்க ளொழியுந்
தூண்டா விளக்கின் சுடரதத் தோன்றும்
பூண்டமெய் பெங்கும் பொலிந்து மணந்தரும்
அன்பெனுஞ் சிவத்தை யறிவினாற் கண்டு
துன்பமொன் றில்லா சுகநெறி யாளரே
யின்பச்சீ ரடைந்தா ரென்பதே சாட்சியங்
கன்மங்கண் மறைத்தாற் காணுமோ? காணு
வார்த்தையைத் தெரிந்து வன்னெஞ்சை யொடுக்கி
சீர்த்தியா நிட்டை சிறநததன் பயனு
மூர்த்தியை யடைந்து முதலிலா முன்னவன்
கீர்த்தியை யணுகிக் கிருபைக் காளாகி
மாத்திரைப் போழ்து மறவா மனத்திருள்
நேத்திரத் தாலே நிமலனி னுருவைப்
பாத்திரம் போலப் பார்த்து மகிழ்வர்
சாத்திர மறைநலோர் சாற்றிய திதுவே
எங்கு மூலாவி யெழிடரும பரசிவந்
தங்கியப் பெரும்புகழ் சந்திர சடாதரன்
மங்காத் திருவடி வாழ்த்தினர் வாழ்ந்தா
ரிங்கிதம் பெறுதற் கேற்றயிச் சனனங்
கடந்திடு முன்னமே கருத்தினில் வைத்து
யிடபவா ஹனமீசை யென்றுய் பார்வதி
தொடர்ந்திடு தொண்டர் தூய வள்ளுவருடன்
நடஞ்செய்து காட்சி நல்கவே பிரமன்

சிரங்கை யேந்தி திருவுலா வருகும்
பரமன் கபாலீசன் பதும சேவடிதொழ
வரமெலா மடைகுவர் வணங்குவர் மேலோர்
சரணதை யேத்தி சந்ததம் வாழ்குவமே.

---

## சுகானந்த துவாதசமாலை.

---

### வெண்செந்துறை.

---

இறையவ னெனவரும் ஸ்ரீகபா லீசன்
மறைசொலும பெம்மான் வரந்தருங் கடவுள்
கறையிலான் றிருவடி கனிந்து யேத்தி
குறையெலா மகன்று குணங்கொள் ளுவமே.

---

### பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

---

அகண்டபரி பூரண வனுதினித் தியசுபிஷ
வற்புததற் பரமசுகுண
வகிலவா தாரமென சருவத்துளே நிறைந்
தளவிலா மகிமைமன்ன
புகலரிய மெய்ஞ்ஞானப் பொக்கிஷமதா யுளம்
பொருந்தியே நடனம்புரியும்
புங்கமே விலையிலாத் தங்கமே யங்கமே
போற்றவரு மெய்லிங்கமே
திகழனந்த வடிவெலா முனதுருவ முனதுமயம்
செயலெலா முனதயெனவே
தெய்வீக லட்சண மளவளாவியே ஞான்றுந்
தெரிசித்தோர் சொன்மனக்குந்
துகளிலா ரூபமே துத்திய சத்தியசாந்த
தொய்தபதந் தனின்காட்சியே
சுத்தனே ! மஹத்வனே ! ஸ்ரீகபா லீச்னே !
சுகானந்த பதஞ்சரணமே. (க)

அங்குள தி யிங்குள தி வம்மையிம்மையு முள தி
வலைகளுக் கப்பாலதா
யாணும்பெண் ணலிமுத லாயுள்ள சனனங்க
ளனைத்தினுங் கலந்தபிரானத்
தங்கியுல விடுஞ்சு தெனும்ரக சியந்தனைத்
தானறிந் தண்மைகண்டு
சர்வாதி காரணனு நீயலா திலையெனுஞ்
சம்பந்த முள்ளநான்கு
யிங்கித மிகுந்தசா தனைவழியி னின்றவர்க
ளொன்றுமொழி யாதநிலையி
லின்புற்று சனனம்வருந் துன்பமற் றெஞ்ஞான்று
மேகாந்த பதமடைவ ராய்த்
தங்கமொழி தனையுணர்ந் தனையேத்தி நலம்பெறவே
துணைசெய்ய வருங்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (௨)

ஆதார மாறிலே மூலாதா ரத்திலே
வைந்தெழுத் தானததிலே
அடிநடுவு முடிவுமில் லாதயிட மதனிலே
வஷ்டலட் சணவடிவமாய்
போதரச மெய்ஞ்ஞான பூதியந் தன்னிலே
பொய்மெய் யிரண்டுமற்ற
பூரணா னந்தமெனு விஞ்சைநிலை கைவர
போக்குவர வற்றததிலே
நாதநாதாந்த சொரூ பாதிக்ய வருபமய
நாடிநா டாதநிற்கு
நயசுகுண நடுவிலே நயனவொளி தன்னுளே
நடனமது புரியுஞ்சிவமே!
ஞான வெளிகண்டு மகிமையைத் தெரிந்தறிவாய்த்
துணைகொள்வோர்த் தொழுங்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (௩)

அண்டபகி ரண்டமு மனைத்தினுங் கலந்துநல
மருட்செயுங் கங்கைவேணி!

அதுபிது வெனுஞ்சட் டிராதபர வடிவமே!
ஐயம்பொறிகளின் வாதையாத்
கண்டவைகண் மெய்யெனக் கண்ணிலா கபோதியாய்
காலனுக் காளர்கவே
காலங் கழித்தயிக் கயவன்முகம் பார்ப்பரியார்
கனகசிலம் பொலிபாதனே!
எண்டிசையும் போற்றிசெயு மெவ்வுருவ மவ்வுருவ
மெல்லாமு னுருவமல்லா
லேதுவே ருருவமொன் றில்லையென காட்சிகண்
டிருதயவா லயமானதிற்
றொண்டுபுரி தொழும்பின ருண்மையில்லை யுற்றபின்
றனைவர்தா ளுங்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (ச)

கன்னலங் கனியென வடியர்க்கு ளின்பமாய்க்
கலந்துவுற வாடிநன்மைக்
காட்டிவினை யோட்டிநிலை நாட்டி தாட்டிகமாய்க்
கருத்தில்விளை யாடுமரனே!
சொன்னய முதிர்ந்தகவி பாடிமலர்ச் சூடியருட்
சூழ்ந்துவாழ்ந் தனரன்பர்கள்
தொல்லையெனும் பொல்லாத அல்லலாம் வினையது
சொல்லரிய முத்திதருமோ?
பன்னகம் வாய்ப்பட்ட தேரைபடும் பாட்டைபோற்
பரதவித் திடும்பாவியை
பட்சமா யருகே வழைத்து நிட்டைவழியைப்
பாலிப்ப தெந்நாட்சொலாய்?
தொன்னூ லறிந்ததன் படிநடந் தின்பமிக
துணையாகு மெய்க்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (ரு)

* ஆயனெனும் பிர்மனின் சிரங்கரங் கொண்டதா
லண்ணலேகின் னுருவகுப்பார்
* ஆயிரத் தெட்டுருவ தானதிரு காசியி
லமர்ந்தவுக் கானதனிலே

சாயாம ணிட்டையாற் றன்னுருவே வேறாகத்
  தானகண்ட * மூசுவகர்மன்
    சம்புவென போற்றிசெயா மணவகங் காரத்தாற்
      றன்னுடன் றெண்ணூற்றறுவரை
மாயசிலை யாககியதன் மத்தியி னடஞ்செய்த
  மனமமென்றே வறியவும்
    வல்லனோ சிறிதுமிலை பொல்லாத் நெஞ்சனுளம்
      வயமுணர்ந் தேத்தவருள்வாய்
தூயநெறி யாளர்க ளிம்மகிமை யுணர்ந்தபின்
  துணைகொள்ள வருக்கடவுளே!
    சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
      சுகானந்த பதஞ்சரணமே. (௬)

* சர்வலோக சரண்யனாய் சர்வபூதாதி தேகபோகனாய் சர்வான்மாக்கட்கு வேண்டுவன வரையாது கொடுத்தாதரிக்கும் பெருமானாக யினிது விளங்குஞ் சிவம் எல்லாவற்றிற்கும் முதலானவனாக தன்னை யுண்டு பண்ணுவா ரொருவருமில்லாது பசுக்களைப்போல சனனமரண வாயிலகப்பட்டு பிறந்திறந்து வாடுந் துன்பமில்லாது, சச்சிதானந்தமாயுள்ளது. அத்தகைய பெரும்பொருளை பெரியோர்கள் அளவிலாத பாடுபட் டதன் வழியினின்று இன்பமுத்தியை யடைந்தாரென்பது சைவாகமக் கொள்கையின் முடிவுரை.

அவைகள் மெய்ப்படுவான்வேண்டி தேவருட் சிறந்த பிரமாவிற்கு ஐந்துதலை யுடையனவெனுமெண்ணக் கிளர்ச்சியாற் சிவபெருமானை மதியாது நின்றனனென வன்னவன் மமதையுணர்ந் தடக்குவானுன்னி ஐந்து சிரத்திலொன்றைக் கிள்ளி கையிற்கொண்டனரென மஹத்துவத்தை யாவருமறிந்து வழிபடுமாறு கபாலமாகிய பிரமாவின் றலையோட்டை யேந்தியதால் கபாலீச்சுரனென் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனாற் சிவமே யாவர்க்குந் தலைவனெனப் பேறப்பட்டது.

இதற்கு நிதர்சனமான சாட்சியத்தை கைலாசவாசிகளாகிய கண்ணுவர்: ஏழாயிரவர்க்கு மூசுவகர்மன் அடைந்த நிலையை பதுமதேவர் எடுத்துரைத்தார், அவை வருமாறு,

சப்தரிஷிகளுக் கிருப்பிடமாகிய பொதிகைமலைக்கு வடபாரிசத்திலுள்ள காந்தர்வ வனத்தில் உத்தவ தேலரென்பார் நிட்டைகூடியிருந்தார். அவ்வனத்தில் அனேக முனிகண தபோதனர்களுக்கு பலகாலமுந்

துன்பத்தைச் செய்துவந்த முகுவகர்மன் என்னும் வனசரன் ஓர்நாள் அம
முனி கணங்களிற் சிறந்த வன்மீகேந்திர தேவர் வருகையைக் கண்டு
அவரது நெற்றி நடுவில் ஓர்வித ரேகையான வடிவந்தோன்ற அதைப்
பார்த்த அவ்வனசரன் நடுநடுங்கி பயந்தவனாய் அத்தேவரை அஞ்சலியஸ்த
னாகக் கும்பிட்டு தூரவிலகிநின்றான். அவ்வனசரனை பக்தனென
வெண்ணி அவனுக்கு நிட்டையுண்டாகும்படியான மார்க்கத்தை யுபதே
சித்தார். அவனுமதையேற்று அவரது கருணைவசத்தனாய் சிலகாட் பொசிப்
பின்றி, காய்கனி சருகுகளைச் சாப்பிட்டுக்கொண்டு தனது குலத்தொழி
லாகிய கொலைசெய்வதைவிட்டு தனித்திருந்தான். அந்நாளில், அவ்
வனத்திலே எண்ணாயிர வருடமாக சிவலிங்கபூசையில் அன்புமேலிட்டு
அட்ட புட்பங்களா லர்ச்சனைச் செய்துள்ள மதிமேகவண்ணன் என்னும்
முனிவன் தனது சொப்பனத்திற் கண்டபடி தான்பூசித்துவந்த சிவலிங்
கத்தை யெடுத்துக்கொண்டு காசிக்கு செல்வானாயினான், அக்காசிக்குச்
செல்லும் முனிவன் வரவேற்று அம்முனிவருடன்சென்ற வனசரனாகிய
முகுவகர்மன் நிட்டையைக் கைவிட்டவனாகித் தானே சருவமென்ற வகங்
கார யெண்ணத்திலே மகுத்தவனாய சிவலிங்கத்தைக் கொண்டுவந்த அம்
முனிபுங்கவர், காசியிலிடங்கொண்டு விளங்கும் ஆயிரத்தெட்டு மாற்று
யர்ந்த பொன்னாகத்தானே யினிதுதோன்றி சிவலிங்கத்தருகில் ஓரழகிய
பீடமமைத்து அதிலந்த லிங்கத்தைவைத்து பூசித்துவர அக்காசியிலுள்ள
தபோதனர்கள், அடியார்கள் வந்து அருண்மழைப் பொழிந்ததைப்போல்
ஆனந்தம்பாடி கண்ணீர்க்கசிய நின்று வணங்குவதைக்கண்ட அவ்வனசரன்
மதியாதிகழ்ந்து கர்வித்தவனாய் நின்றான.

அந்நேரம் ஆகாயத்திலுள்ள தேவர்கள் புஷ்பமாரி சொரிந்து ஓம்
அரஹர சிவசிவ சம்போ மஹாதேவா எனச்சொல்லிக் கொண்டாடினார்
கள். லிங்கார்ச்சனை செய்துநிற்கும மதிமேகவண்ணன்முன் அவ்வனசர
னாகிய வேடன் பிரமித்தவனாய், பித்துகொண்டவனாய் பினற்றியும் அங்
குள்ள தபோதனர்கள், அடியார்கள் மனம் வருந்தும்படி தனது பூர்வீகக்
கொலைத்தொழிலை விடாதவனாய், துன்பஞ்செய்துவந்தான். சம்போ
சங்கர மஹாதேவா என்னும் துதிசரண வாக்கியத்தைச் சொல்லும்படி
போதித்தும், அங்ஙனமொழிந்து நன்மையடையாது கர்வித்து லிங்கங்க
ளின் அருகே செல்லலும், அங்ஙனம் பூசைக்காக வைத்துள்ள பொருள்
களை வாரியிரைத்தலுங் கேட்பாரை வருத்தலுமாகிய அகங்காரியானான்.
அவ்வேளை அர்ச்சனைக்கு மாறுதலேற்பட்டதெனத் துன்பமுற்றுநின்ற
மதிமேகவண்ணனின் வேண்டுதற்கிணங்கி அவ்வேடனாகிய வனசரனுடன்
ராட்சசக் கூட்டங்களாகிய தொண்ணூற்றறுவரையும் கல்லுருவமாக்கி

அதனது நடுவில் யாவருங் கண்டுமகிழ திருநடனஞ்செய்து அக்கல்லுருவமானவைகளை, தீர்த்தப்படியாகும்படி அமைத்து; அளவிறந்த ஆசீருடன் திருவடிவே சிவலிங்கமாக அதனிடமிருந்து யெழும்தொலியாநின்ற நாதமாகிய சபதத்தைக் கேட்டவர்களெல்லாம் பிறவாமுத்தியுடன் காட்சியுமடைந்தார்கள்.

பரசிவப் பிரபுவாகிய மஹேசனே! இவ்வித பலகோடி நாமரூப மஹத்துவம்நிறைந்த பரமரகசியமாகிய அந்தரங்கத் திருவிளையாடலை யாவரோ காண வல்லுனரென முடிவுரையாயின., ஆதலான், சர்வசங்கார மூர்த்தி பரமசிவமேயெனப் பெறப்பட்டது,

இதனை பதுமபுராணம் சிவலிங்கார்ச்சனைப் படலம் 249-வது கவிமுதல் 315-வது கவிவரையினுங் காண்க

இச்சரிதை திராவிட மாபாஷியம் எட்டாம்பட்டடையில் கலிங்க ராசனுக்கு உத்தவதேவர் உபதேசித்தாரெனவும் பெறப்பட்டது. அதனுள் சிவலிங்கத்தோடு ஐக்கியமானாரென திரிபுவிதி கேட்கப்படுகிறது. எவையாகினும், உண்மைக் கடவுளென்னும் பரமசிவமே மஹத்துவக் கர்த்தாவென முக்காலத்தும் வலிகொண்டு நின்றனவென்பது மலைமேலிட்ட தீபமாம்-

———:———

அம்பர பரம்பர வனாதிநித்திய தத்திய
வமலகுண நிதபூத
வசராசர முதலெழுஉம் பலகோடி யுருவமு
மதற்கேற்ற நாமநேம
மிம்பதியு மம்பதியு மெம்பதியு நிறைவடிவ
மெய்து மெய்தாதுநிற்கு
மெல்லாநின் மயமன்றி வேறெங்கு மிலையென
யெழிலாளர் சொன்முடிவதாய்
நம்பினவர் நம்பனென வந்துதவுங் காருண்ய
நாதனே! செக்கர்வேணி
நவிலரிய நியமநெறி நாளுமற வாதுதொழு
நல்லன்ப ரிதயமதனிற்
றெம்பத மனைகடந்து தொய்தபதந் தனிற்காண
துணையான மெய்க்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபாலீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (எ)

பூரணானந்தமே! பொய்யிலா மெய்யருளம்
பூரிக்க காட்சியருளி
பொன்னுடதற்கருச ராகச்செய் தனையென
புகல்கின்ற மறையினுளவை
காரண காரியம்போலக் கனகமும் பணிபோல
காணவெந் நாள்வருகுமோ?
கருணைமிகுந் தாயென வந்துதவு மப்பனே
காலனை யுதைத்தசிவமே!
ஆரணம் பல்கோடி யவைசொல்லு முருகோடி
யறிந்துமறி யார்கள்கோடி
யாகினு லவ்வறிவி னுண்மைச் சாழலைக்காண
லரிதரிது யென்பர்மேலோர்
தூரஞ் சமீபமா யவரவ ருளப்படி
துணைகின்ற மெய்க்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (அ)

கல்லால விருட்சமதிற் சனகனுதியர் நால்வர்
காணதட்சணு மூர்த்தியாய்க்
கரந்தவுரு கருணைபுங் கடாட்சித்த பெருமையுங்
கயவனுளந் தனிற்றங்குமோ?
அல்லோல கல்லோல மாகசுடு காடுடையு
மந்தநா ளாதரவிலா
தலைகின்ற நேரத்தி லஞ்சாதே மகனேயென
வாதரிப்பவ ரெவருளார்
மல்லாடி வீண்வழக் கிட்டெனைக் கெடுக்கவரும்
வஞ்சமனப் பேய்மாய்கையின்
வல்லமை யொடுங்காது நல்லவ ரிணக்கந்தி
வாய்ப்பதிலை யென்பர்முதியோர்
சொல்லுமுடற் பொருளாவி மூன்றையு மளித்தவர்முன்
துணைசெய்ய வருங்கடவுளே!
சுத்தனே! மஹத்வனே! ஸ்ரீகபா லீசனே!
சுகானந்த பதஞ்சரணமே. (கூ)

எக்கலையு மெக்குணமு மெம்மரபு மெத்தவமு
மெம்மதியு மெச்சமயமு

மெவ்வணமோ வவ்வண மெங்ஙனமோ மங்ஙன
மெழுந்துவிளை யாடற்செயூஉ
முக்குணமு முத்தொழிலு முப்பாமு முச்சுடரு
மும்மலமு முக்கணுடைய
முதல்வனே யாவுக்குந் தலைவனே பத்தருடன்
முத்தருஞ் சித்தர்கணமும்
பக்குவம தானகுண நெறிநிலை நேர்மையும்வாய்மைப்
படிர்துவொரு படித்திறமதாய்
பானுவின்முன் பனியொழியும் வண்ணஞ் சன்மகன்ம
பற்றொழிந் தேத்தவருள்வாய்
§ சுக்கிரன் கண்ணிழந்தே துதித்திட வந்நா
ளேவந்தாண்டக் கடவுளே !
சுத்தனே ! மஹத்வனே ! ஸ்ரீகபாலீசனே !
சுகானந்த பதஞ்சரணமே. (௰)

§ மாபலி சக்கிரவர்த்திமுன் ஸ்ரீ நாராயணன் வாமனவதாரமாக யெழுந்தருளி மூன்றடிமண் தானங்கேட்க, அவ்வரசன் கொடுக்க சம்மதித்தவனாய் வாமனர்க்கு எள்ளுந்தண்ணீ ரிரைக்கவேண்டி சலமுள்ள கரகச்செம்பை யெடுக்க அதை யருகேயிருந் துணர்ந்தவனும், அச்சக்கரவர்த்திக்கு குருவானவனுமான சுக்கிரன் மனம் பொறாதவனாகி அத்தானத்தைத் தடுக்கயெண்ணி சலம்வரும் மூக்கின்வழியை கருவண்டாக வுருகொண்டு மறித்தான். அதைநன்குணர்ந்த வாமனர் அங்குள்ளவோர் தர்ப்பை புல்லினால் அச்சுக்கிரனாகிய கருவண்டின் கண்ணைக்குத்த அவன் கண்ணிழந்து, குருட்டுவண்டாய்த் திகைத்து; மறுக அக்கண்ணையடைய வேண்டிய மார்க்கத்தையெண்ணி வாமனரை குறையிறந்து கேட்டுவருந்த அன்னவரிட்ட கட்டளையின்படி யவராற் கொடுக்கப்பட்ட தர்ப்பைப்புல் திருமயிலையில் வந்துவிழ, அப்பதியில் தன்பேரால் குளமெடுத்து சிவலிங்கார்ச்சனை செய்ய ஸ்ரீ கபாலீசன் திருக்கடைசாத்தி அவரது பூசையை யேற்று இழந்தக் கண்ணைத் தந்தருளினார்.

அதுமுதலாய் திருமயிலைக்கு சுக்கிரபுரியெனவும், லிங்கத்திற்கு சுக்கிர லிங்கமெனவும், அக்குளத்திற்கு சுக்கிர தீர்த்தமென்வும் பெறப்பட்டது. ஆனால் சுக்கிர தீர்த்தமென்பது சித்திரக்குளமென்று பேதப்பட தற்காலம் வழங்கிவருகின்றன.

ஆணாகிப் பெண்ணாகி யலியாகி யசராசர
மனைத்தினாலும் பிராண்ணாகி
அன்னை தந் தையுமரசன் குருதெய்வ மனைவிமக்க
ளருஞ்சுற்ற மியாவுநீயாய்
கோணலில் லாதமன முடையநெறி யாளர்கள்
கொண்டாடி யகமகிழ்ந்து
கும்பிட்டு வரம்பெற்ற வற்புதச் செயலதைக்
குவலயத்தின் மாய்கையால்
வீணனென வீண்செயலை விரும்பி கரும்பெனயருந்தி
வெகுளியஞ் ஞானமலியும்
விகடப்ர சங்கனா யலைந்து திரியுமேழை
வேதைதீர்த் தாதரிப்பாய்
தோணுமோ ? நின்னுருவங் காணுமோ ? தயைசெய்து
துணையாக வருங்கடவுளே !
சுத்தனே ! மஹத்வனே ! ஸ்ரீகபா லீசனே !
சுகானந்த பதஞ்சரணமே. (௰௧)

சத்துசித் தானந்த மானபரி பூரணந்
தழைத்திலகு ஞானமணியே
சகல தெய்வச்சொரூப மாகிவிளை யாடற்புரி
சம்போ சங்கரமாதேவ
எத்தவஞ் சிறக்கினு மெவ்வகை துறக்கினு
மியமமுட னுரையெண்வகை
யியற்றினு மென்செயு மெல்லாநின் சாயலென
வெண்ணுதலே முத்தியென்பார்
நித்தியனே நிராலம்ப நிஷ்களா னந்தகுண
நிலவுஞ் சந்திரமௌலியே !
நினையன்றி யொருபொருளை தினையளவு நினையாத
நெறியுடன் சிவப்ரகாசன்
நித்திய சத்தியசாந்த வாரியி லிறங்கிதொழ
துணைசெய வருங்கடவுளே !
சுத்தனே ! மஹத்வனே ! ஸ்ரீகபா லீசனே !
சுகானந்த பதஞ்சரணமே. (௰௨)

——)(——

## காருண்யமாலை.

### வெண்சேந்துறை.

—o—

ஆருயி ராகி யாவையுங் காத்தரு ளாண்டவனே !
சீருடன் செல்வஞ் சித்திக ளெட்டுந் திகழவரு
நேருயர் மஹனியர் நிட்டையிற் காணு நின்மலனே !
காருண்யனே நின் கண்பார்த் தருள்வாய் கடையனையே.

—§—

### பதினறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் – நட்டராகம்.

—*—

சீரார்ந்த சுபிஷ்குணு லயமேமறை முடிவே
திருநிறையும் பரத்துவனே!! செழுங்கலையின் வடிவே !
சேணுலகோ ருருகிருந்து ஹரஹர சிவவென
சிவயநம நமசிவய வென வெண்ணீறு பூசி
பாரார்ந்த வாழ்வனைத்தும் பலுநிலங் கொழித்து
பத்தர்சிவ முத்தரஷ்ட சித்தரென நிலைத்து
பாரமார்த் திகமெனுஉம் பரமார்த்த நிலையாம்
படியதனிற் குருலிங்க சங்கம பத்தியுடன்
பேரார்ந்த நித்தியரா யழியாப்பத மடைந்தார்
பெருமானே நின்மகத்துவம் பேசவல்லா ரெவர்காண் ?
பிர்மாதி யாஞலு மென்செய வல்லுனரிப்
பிரபஞ்ச மூளதனைத்து மொடுங்குமுன்றன் கழலிற்
றேரார்ந்த மயிலையெனுங் கயிலைலளர் சிவமே !
சிற்சுக லட்சணநிலவுந் தினகரோ தயமே !
சின்மயா னந்தனே ஓம்கபாலீச் சுரனே !
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (௧)

வேத வேதாந்தமுடி வாகியசித் தாந்த
விபரமதை யுள்ளபடி குருமுகத்தா லறிந்து
விஞ்சையெனு ஞானநிலை யடைவதுவே பாக்கியம்
மேதாவி யர்களெனுஉ மேலவர்கண் மொழியே
சூதான வெட்டவெளி தன்னை சிதாகாஸ
சூக்ஷமமது யுளயெல்லைக் கண்டதனுண் பரிவாய்த்

துங்கசிவ யோகமெனும் வாசியதை மருவிச்
சொல்லாத பேரின்ப சுகமுத்தி சாதனையை
ஆதார மாகக்கொண்டு அங்சிங்மங் ஸ்ரீங்கென்
றந்தரங்க மானவுமை யாகுங் குண்டலியு
மருள்கின்றவமிழ்தமதைப் பருகிதன்னை மறந்து
யடைவதற்கு வரியசுக மணுகிவாழ்வ தெந்நாள் ?
சீதபன்சொல் மயிலையெனுங் கயிலைவளர் சிவமே !
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே !
சின்மயா னந்தனே ! ஓம்கபாலீச் சுரனே !
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே.      (உ)

விஞ்ஞான கலர்முதலும் விரும்பியஷ்ட சித்தி
வேண்டினரா லதையெவரோ வெறுப்பாரரி ததுவே
விகற்பமிகு கன்மமதா லதைமறுத்து வுரைப்பார்
வேதியனுஞ் § சவுபரியும் வணங்கிய லிங்கமது
யெஞ்ஞான்றும் பொன்னொளிதந் திருளகற்று மகிமை
யிருடி சாங்கியமுனிவன் றனக்கு காரதரா
லெடுத்துரைக்கக் கேட்டதனைக் கண்டுதொழ வரம்பை
யிச்சித்து யிந்திரனைக் கொண்டவளு மடைய
தீஞ்சமுற்ற சவுபரியுந் தவஞ்செய்ததை யடைய
சார்ந்தரம்பை சாபமுற்ற மகத்துவமியா ரறிவார்
சாஸ்வித சுகாரம்ப சைதன்ய சுவ்ஷிதமே !
சமஸ்ததேவ தேவர்கட்குந் தலைமையென நின்று
செஞ்சொனிறை மயிலையெனுங் கயிலைவளர் சிவமே !
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே
சின்மயா னந்தனே ! ஓம்கபாலீச் சுரனே !
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே.      (ந)

§ எல்லா வளங்களும் பெருகி ஆலயம், சத்திரம், அடியார்சேவை தானதன்மம், பரோபகாரசிந்தை, சிவாலய வழிபாடு, பெரியோர்களாகிய முற்றுந்துறந்த சீவமுத்தர்வாசம், சிவசமயசம்பந்த வைராக்கியம் சிவசின்ன நிறைவு, இவைமுதலாய சிறப்புக ணிறைந்துள்ள சோழநாட்டையடுத்த திருக்காற்குடியென்னும் புண்ணிய பூமியிலே, முன்சனனத்தின் புண்ய வசப்படி மயூரமாகிய மயில் தரிசனம் பூசையிற்கண்டு அதன் வழியாகக் கண்ட தெய்வீக லிங்கத்தை காந்தருவ வரசனாற் கிடைக்கப்பெற்று கும்பிட்டு சதாசிவ்ஷடானுபரனாக விளங்கிய சவுபரிதேவுரென்னும் அந்தணன்

ஆசிரம முழுதுங் கனகவொளியா யிருப்பதையும், அவரிடஞ் செல்வாருக்கு சற்பொடிகள் பொன்னாக வாரிகொடுக்க யாவருந் தனவந்தராவதை நாரதமுனிவரால் கிடைத்த மந்திர பலத்தினால் தனதிடமிருந்த மூலலிங்கமானது ஆகாய வாசிகளாற் களவுசெய்துகொண்டு போகப்பட்ட திருமுதல் சிவலிங்கார்ச்சனையை வெறுத்து, உணவு பூஜை யொன்றுமின்றி செவ்வந்திமலை யடிவாரத்தில், பேசாது கற்சிலைபோல் கிடக்கின்ற சாங்கிய முனிவன் தனது குருவாகிய நாரதமுனிவராற் கேள்விப்பட்டு தனது பக்தி மேலிட்டு சிவபூஜையின் வலியினால் உண்ணல், விரதம் வேண்டாது பேசாத் துறவியாயிருந்த சாங்கிய முனிவன் அவ்வேதிய ராசிரமத்துக்கு வந்து கண்கூடாகக் காட்சியாய் சிவலிங்கத்தையும், அங்கு விளையும பொன் மகத்துவத்தையுங்கண்டு அவருடன் அவரும் கைவிட்டிருந்த பூசையைக் கைப்பிடித்து கும்பிட்டுவருங்காலத்தில் இம்மகிமை மூவுலகுங் கேட்க; மணிகாந்தர்வனோடு யமுனைக்கு தீர்த்தமாடவந்த அரம்பையானவள் கேள்விப்பட்டு, அந்த லிங்கததை இந்திரனைக்கொண்டு மணிகாந்தர்வனாலடைய, அவ்வேதியனுடைய வீடு இருளடைய தன்பார்வைக்கு ஒன்றுந் தோன்றாது பிரமஹத்தி யடைந்தானைப்போன்று ஊமையாய் ஒருவரிடமு மொன்றும் பேசாது சிவலிங்கா! சிவலிங்கா!! எங்கு சென்றனை இனியென் கடமிருந்து யாதுபயனை யடையும், அச்சிலைபோலென்னையும் மரணகாலன் களவாடினாலன்றோ லாபத்தையடைவேனென்று குறையிரங்தானாய்த் திரிவதையறிந்த பரமசிவம் கைலையில்மூலபலலிங்கமாயமைந்து பிர்ம விஷ்ணு தேவர்களால் பூசித்துவரும் லிங்கத்திலுண்டான சப்தத்தைக் கேட்ட விஷ்ணு மூர்த்தியினால் அரம்பையிடமிருந்த சிவலிங்கத்தை அவ்வேதியர்ப்பெற்று பழமையான பக்தியிற் சிறந்து மூவுலகமுங் கொண்டாடும்படி வரத்தையும் பெற்றார். அந்த லிங்கத்தை களவாடிக்கொடுத்த குந்தருவன் சர்ப்பமாகவும், அரம்பை வேடப்பெண்ணாகவும் சனிக்கும்படி சாபத்தையடைந்தார்கள்.

சிவலிங்கார்ச்சனைப்பல னெவ்விதமானதென்று கேட்ட மணிபல்லவ அரசனுக்கு சவுனகாந்த தேவராற் சொல்லப்பட்டதை நாரதீய முனிவரால், சிவலிங்கத்தை மதியாதிருந்த சாக்கியனுக் குபதேசித்தது.

நாரதீய புராணம் சிவபூசைப்பலன் அர்ச்சனை அத்தியாயம் 219-வது கவிமுதல் 348-வது கவிவரை காண்க. இதையே திருக்காற்குடி வசவகாந்தனுக்கு பராச முனிவராற் சொல்லப்பட்டதென, சௌமிய புராணம் வனம்புது படலம் 72-வது சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆதியந்த மத்யமெனு மூன்றிலதா யுளதா
யவையிவையென் றதுவிதுவென் றம்மையிம்மை யெனவே
அதுலித விசாலம்ப மமர்ந்தபெரும் பொருளா
யாப்தருளந் தெரிந்துவிளங் கிடவரு மற்புதஞ்சூழ்
சோதிமன் னுஞ் சுயம்பிரகாச சுத்தசாத்வீகமதிற
றலங்கிநிற்குந் தூயவுரு தோற்றமதைக் கண்டு
சொல்லரிய பதியணுகி யென்றமொரு படித்தாய்த்
தூங்காம லேங்கிசுக மடைவதெளி தலவே
பாதிமதி கங்கைமங்கை மான்மழு த்ரிநேத்திரம்
பணவுடனே சதுர்ப்புயமு நடன பூம்பாதமதைப்
பகரரிய தேவர்கண மஞ்சலிச் செய்திடவே
பற்றுக பற்றுகவெ னுஞ்சொற் பருதியெனத் துலங்க
சேதனமில் மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே
சின்மயா னந்தனே ஓம் ஸ்ரீகபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (௫)

எந்தமன மெந்தவழி யிடையினடங் கிடுமோ
யிறதிவரை யசன்மயமா யிருந்து கெடுத்திடுமோ
விஷயறிந்த பெத்தமுத்தர் சிவர்க ளியாவர்களு
மின்னல்மிகு கொன்னவெனுந் தொன்மைகன்ம மதனை
பிந்துகளை மூன்றினுக்கு மப்பாலே யிலங்கும்
பிரணவ சொரூபதீப பிரக்ஞான மடைந்து
பின்முனற் றனந்தபத வ்யோக லட்சணமதைப்
பிரியமுற் றதையோர்ந்து பேசாமௌன நிலையை
சந்ததமும் பொன்மலையைச் சார்ந்ததாகமெனவே
சதுர்வித வுபாயமதிற் றனையிருத்தி நிட்டை
தல்லாப யோகமது கைவரி ஞானந்த
சமுத்திரத்தி லிறங்கிகண் மூடிதவம் பலிக்குஞ்
சிந்தைதரு மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே
சின்மயா னந்தனே ஓம் ஸ்ரீகபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (௬)

எல்லாமு னுருவஞ்செய லெனத்தெரிந்தோ ரெல்லா
மெதுவரினுஞ் சிறிதும்மழு வாதிட மூளார

யிருந்தவர்க ளன்றியென்போல் வாய்ப்பந்த ரிட்டவரி
வெவர்பிழைத்தா ரெவருமில்லை யேகாந்த சுகத்தில்
வல்லாரே நல்லவர்கள் வரமளித்து மலடர்ந்து
வாழாரும் வாழ்ந்தனரிம் மகிமையேழை யுணர
வல்லவனோ? யில்லையில்லை மஹானியர் வாக்கியமே
மாசற்ற யுளமதிலே மன்னையின்பம் பிறக்கும்
சொல்லாரு முத்திநிலைத் தோன்றும் பூரணமதி
சோபிதமாய் சுப்ரதீப மாகவெங்குந் துலங்குஞ்
சுடரொளியுஞ் சோதிநிறைந் திடுமருமைத் தெரியுஞ்
சுக்ஞான மயந்தொடருந் தோற்ற மொருடுக்கமிலாச்
செல்வந்தரு மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுக லட்சணநிலவுந் தினகரோ தயமே!
சின்மயா னந்தனே ஓம்கபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (௬)

அப்பன்னை குருதெய்வ மரசன் மனைவிமக்க
ளணியாகுஞ் சுற்றமற்று மித்திரர் சத்துருக்க
ளனைத்துநினை யன்றியில்லை யாவுநீயென் றெண்ணு
மறிவினரே தெரிவரியத் தெளியுஞ்சிந்தை யுடையார்
முப்பசையா முப்புரத்தை மூவலியா லெரித்து
முத்திநிலைக் கருக்ஞான மோனமுளார் பிழைத்தார்
மூச்செனுஞ் சுவாசமதை வாசியினி லிழுத்து
மூதண்ட கோடிகளை யகத்தினிலே பார்த்து
கப்பிடேம் பசிதாக ருசிசுக துக்கமெலாங்
கடந்தவைகட் கனவினிலுங் கலந்து வராமற்படி
காலம்பூசை விரதமற்றுங் கருத்தினிற்கா தொழிந்தக்
காலமதே கைகண்ட பொருள்வாய்க்கு முண்மையதே
செப்பரிய மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே
சின்மயா னந்தனே ஓம் ஸ்ரீகபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே: (௭)

எங்குமொரு படித்தாக வெண்ணுகின்ற ஞான
மேகாந்த நிலையுஞ்சுக மணுகி விஸ்ராந்தியதை
யென்றுங்கந் தருளியின்ப மடையுமிந்த நெறிகு
ழிடமதனி னின்றவர்க ளெவையும் வேண்டாதவரே

சங்கர சுயம்பை சதுர்முகமெனுஞ் சாதனைகொள்
சாதுக்க ளுள்ளமதிற் றங்குமாயை யிலையாற்
சமஸ்த வாதாரகுணங் தழைத்திடுவ ரறிஞர்
சசிகண்ட சாமகண்ட சகலாகமத் தலைமைத்
தங்கும் பரமவதித சாட்சிய காட்சியினாற்
றழையண்ணலின் ருளதனைத் தாவிதொழு தென்றுஞ்
சார்ந்துவரும் பிறவிதய ரகன்றிடலே முத்தி
சாயுச்சிய பதவியென சாற்றுமறை யதுவே
திங்களொளி மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே!
சின்மயா னந்தனே! ஓம்கபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (அ)

ஆடற்செயுந் திருவால வாயிலன றனைவரு
மஞ்சலிக்க வறுபத்து நான்கு விளையாட
லதைநடத்தி யகமகிழ்ந்த வருமையா ரறிவா
ரறிந்தவர்க ளாசித்து பூசித்தரு ளடைந்தார்
பாடற்செய்த மூவரன்பிற் பற்றிய பற்றுகளைப்
பற்றினவர் பற்றகன்றார் பற்றுமொரு படியிற்
பரமகிருபா நிதியெனவே பாரனைத்துந் துறந்தார்
பாக்கிய மோக்ஷியவாக்கிய நோக்கிடினே பலிக்கும்
நீடச்செயு மனக்குரங்கி னுபாச மனைத்து
நெருங்காது கைவிடினே யன்றுசுக மணுகு
நித்தியாப ரோட்சமெனு நிரதிசயா னந்த
நியமநெறி வாய்த்திடினே நிட்டையே நிலைதான் ?
சேடன்றொழு மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே
சின்மயா னந்தனே! ஓம்கபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (க)

மாயமெனும் படுபள்ளத்தி லிறங்கினவர்ப் பிழைக்க
மருந்தெனும் பஞ்சாக்ஷரத்தை யோதிமலந் துடைக்கும்
வல்லமைசூழ் திருவெண்ணீறு பூசியக்க மணிந்து
மாற்றொனு மைவர்களின் வலியொடுக்கி நிலைக்குந்
தூயகுண மடைந்திடினே தொடருமின்ன லழியுஞ்
சொல்லாரு முத்திபத சூக்ஷ்மநெறி யணுகுஞ்

சுயம்பிரகாசந் துலங்கு மமுதமது சொரிவுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதியது தெரியுங்
காயகற்பம் வேண்டாது கருத்து கலங்காது
காணபாலுங் காட்சியுமொன் றாகும்படி யணுகும்
கனகமொளி மலர்மணமுங் கலந்ததென ஞானக்
கண்ணுடையர் கண்ணுடையா ரில்லா ரந்தகரே
தேசம்புகழ் மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே
சின்மயா னந்தனே! ஓம்கபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே.

முனதொடுங்க வசூத்தசாகை தனையுணர்ந் ததனை
வள்ளலெனுங் குருமூர்த்தி யோதனை யாதரவால்
வந்தடுத் ததனை யெடுக்குஞ் சனனவூழின் வலியை
மாற்றினவர் சிவமுத்தர் மஹனியா பேர்படைத்தார்
எனதினது யெனும்பேத மெதுவரையி லுளதோ
யெதிருக்க வாதனையு மெதிர்த்தவஞ்ஞ நிலைக்கு
மெனப்பெரியோ ரவைசிறிது மிணங்காவழி யடைந்தா
ரெழிலார்ந்த குணமுடைய யெய்தினவர்ப் பிழைததார்
தினகரமே லொளிசுராளிம்பாற் சிந்தைய தொனறுபட
செய்தவமே மெய்தவமாய் சைவநெறி புரையாய்
செழுகுணத்த ரனுபவிப்பர் சிவப்ரகாசனெனுஞ்
செடியன்பவ யிடியுடையேன் றனையிங் காளுதியோ?
தினம்பணிகொள் மயிலையெனுங் கயிலைவளர் சிவமே!
சிற்சுகலட் சணநிலவுந் தினகரோ தயமே!
சின்மயா னந்தனே! ஓம்கபாலீச் சுரனே!
திருவிழிசாய்த் தருட்புரிவாய் தேவே காருண்யனே. (௰௧)

---

## வணக்கமாலை.

—*—

### காப்பிய கலித்துறை.

—0—

மணக்கம ழுங்கொன்றை மதிநதி சடையுடை வள்ளலே!
இணங்குநின் மெய்யடி யாருட னென்றெனை யேற்பையோ?
சுணங்க னிலுங்கடை யாயுலை வேன்படுந் தொல்லையற
வணங்கு கின்றேனின் மலரி பாதந்தன்னை வரந்தரவே.

175268 600 008. Q23:58.2W N27

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—§—

### பண் – நட்டராகம்.

—*—

உள்ளமே கோயிலெனக் கொண் டுலாவிடு முத்தமனே
தெள்ளியத் தேனமிழ்தே மறைத் தேடுமெய் சிவபரனே !
கள்ளவூழ் நெஞ்சதினால் மிகவாடிக் கலங்குகின்றேன்
வள்ளலே நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௧)

தேசிகா னந்தனெனத் திகழுவருஞ் சின்மயனே
ஆசிலா மெய்யடியா ருளநடிக்கு மம்பரனே
ஏசிலா பக்திநெறி பணிதந்து யென்றகொணீ
மாசிலா நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௨)

கூற்றனை யுதைத்தவனே தேவர்க்கெலாங் குலதெய்வமே !
நீற்றைப் புனைந் தடியாரென்றும் போற்று நின்மலனே
காற்றி லிலவம்பஞ்சா யலைகின்றேன் சுயவனுமே
மாற்றிலா நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௩)

சீனியே கற்கண்டே திகட்டாதத் தீங்கனியே
ஞானிய ருள்ளநிறை சிவமணக்கு நறவசனே
ஈனச் செயலுடையே னெங்ஙனங்கண் டின்படைவேன்
வானே நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௪)

சுகமே தூவெளியே சுடரேஞானச் சூரியனே
அகமெனு மிருதயத்திற் சிவனாக வமர்ந்தவனே
சகிதனி யிரண்டுமொன்றாய் நினையன்பர் தோத்திரனே
மகத்தவ நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௫)

அன்னை தந்தைகுரு தெய்வமனைத்து மானவனே
என்னைப் படைத்ததென்சொல்? வினையேற்று யேங்குகிறேன்
தன்னந் தனிப்பொருளே சிவானந்த சாகரமே !
மன்னு நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௬)

பூரணா னந்தமென வெங்குநிறைந்த பூசானே
காரண காரியங்கள் கடந்தவருட் கலந்தவனே
பேரறி வானவனே சுகானந்தப் பேரின்பமே
வாரணா நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௭)

சொல்லொணா சஞ்சிதமே சுபமங்களஞ் சூழ்வடிவே
எல்லையில் லாதவனே பிறப்பிறப்பு மேதுமில்லா

நல்ல பரம்பொருளே நாயினேனையா ணம்பிநின்றேன்
வல்ல நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (அ)

அழகனே ! வாலிபனே யெனப்பனே ! ஆண்டவனே !
விழலுக்கே வுழைத்தலுத்தேன் றெரிந்தனைநீ விஞ்சையருண்
பழமே பழச்சுவையே பரமார்த்த பருணிதனே
வழலே நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (கூ)

அத்தனே ! ஆருயிரே ! சருவத்தையு மாட்டிவைக்குஞ்
சித்தனே ! சித்தரெல்லா மின்னுந்தேடி சேவிப்பவா !
சுத்தனே ! தொல்லையில்லார் தொழுதேத்துஞ் சூக்ஷமயமெய்
வத்துவே ! நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰)

பொய்யிலா மெய்யர்கண்டு சதாபோற்றும் புரந்தரனே
நையச்செய் தேனைக்கெடுக்கு மாயவாழ்வை நல்கியதேன்
செய்வகை யொன்றுமில்லா தலைப்புல்லனுனைச் சேருவனோ?
வையமேன நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰க)

உண்ணலு முடுத்தலிலே சிறந்ததிந்த வூத்தைகட
மெண்ணலு மேகுவதுந் தொழிலாக யிருப்பதுவே
கண்ணிலான காணபதெங்ஙனதைப்போல கதியிழந்தேன்
மண்புகா நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰உ)

ஆசாபா சந்தனிலே யலைவேனை யாளுதியோ ?
பேசா மௌனியரே பெரும்பேறு பெற்றவர்காண்
மாசற்ற மனத்தவரே பிறவியற்று வாழ்ந்தாரன்பர்
வாசமே நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰ங)

இறக்குந் தொழிலுடையேன் பெறறசென்ம மென்பயன்பின்
பிறக்குந் தொழிலதற்கே சன்மதன்மம் பேசுமறை
சிறக்க கற்றவரே யுண்மைச்சாதனை சேர்ந்துநின்றார்
மறக்கா நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰௪)

வஞ்சனைக் கள்வருடன் கலந்துண்மை மறந்தேனந்தோ
செஞ்சிலம் பணிந்தபத மெளியேன்றுதி செய்குவனோ ?
கொஞ்சிய வுமையவளை யிடபாகங் கொண்டவனே
மஞ்சுரு நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰ரு)

திலகட்செஞ் சடையுடையாய் திரிபுரத்தைச் செற்றவனே
பொங்கிய விடமுண்டு சருவத்தையும் புரந்தவனே !
கங்கா தரனெனுஉஞ் சிவப்ரகாசன் கவிபாடி
மங்கா நின்வரந்தா பொன்னடியை வணங்கினனே. (௰சு)

—— )( ——

## புண்ணிய முணர்த்தும் புனிதமாலை.

### வெண் செந்துறை.

எண்ணிய வெண்ண மெல்லாந் தெரிந்த யீசனே
பண்ணிய தொழிலிற் பாவமே செய்தப் பாதகனே
திண்ணிய ஞானப் பாதம் பணியத் திருதிநீ
புண்ணிய முனக்கு புலையனுக் கோர்சொற் புகலுமே.

—0—

### பண் - குறிஞ்சி.

சீர்நிறை யன்பர்க டேடிவணங்குஞ் சிற்பரா
பார்நிறை வாழ்வு யனைத்துந் துறந்தவர்ப் பாக்கியமே
கோர்நிறை மாமயி லாபுரி வாழு நிமலனே
போர்நிறை முன்வினை நீக்கியா ளுனருட்குப் புண்ணியமே. (க)

சங்கர சம்போ சதாசிவ சம்போ சரணென
மங்களந் தங்கிடு மாணடி வாழ்த்தி வணங்கினே
னெங்கும் புகழ்பெற்றனர் மயிலாபுரி யீசனே
புங்கனேவினை நீக்கியா ளுன்னருட்குப் புண்ணியமே. (உ)

ஐயனே! ஆருயிரே! யெனைப் பெற்றயெ னன்னையே
வெய்ய குணமதி னுல்மிகவாடி வெகுண்டனன்
துய்யந லந்தணர் வாழ்மயி லாபுரி சோதியே
பொய்யுடற் சேர்வினை நீக்கியாளுன்னருட்குப் புண்ணியமே. (ங)

முத்திக் கருசுராய் முன்னவர் தவத்தில் மூழ்கினர்
பித்துக்கொளு மாயப் பேயாற் றவித்தயிப் பேயனை
சித்தம்வைத் தாண்டருள் மாமயி லாபுரி தேவனே
புத்தி நீங்கும்வினை நீக்கியா ளுன்னருட்குப் புண்ணியமே. (ச)

என்னென்றே வெண்ணியே யேங்கிக் குழையுமிவ் வேழையை
பொன்னுரு மேனியா நின்விழி சாய்த்தின்ன றப் போக்குவாய்
மனனுமெய் யன்பர்கள் வாழ்மயி லாபுரி வள்ளலே
புன்மை நிறைவினை நீக்கியா ளுன்னருட்குப் புண்ணியமே. (ரு)

இகபர சாதனை யாவுந் தந்தாளு மஹேசனே
நகவெளு மாயக் குடலை யெடுத்தென் றஞ் சோங்கினேன்
பகாருந் தேவர்கள் வாழ்மயி லாபுரி பரமனே
புகலு மூழாம்வினை நீக்கியா ளுன்னருட்குப் புண்ணியமே. (சா)

பாதகஞ் செய்தவ ரில்முதற் பாதகம் பற்றின
பேதை யிவனென்றோ கைவிட்டனை ஞான பிர்மமே
ஆதர வற்றலைந் தேன்மயி லாபுரி யண்ணலே
போத மிலாவினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே. (௭)

தனிப்பர மாயெங்கு மோங்கி வளர்ந்திடுந் தாணுவே
இனித்துணை யானொ ருனையன்றி யில்லை யீசனே !
பனித்தடஞ் சூழ்மயி லாபுரி வாழும் பரமனே
புனிதனே! வூழ்வினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே (௮)

எத்தனை யெத்தனை யென்றெண் ணுவே னெளிமேக்கனை
அத்தனை யத்தனை யும்புரி தாபமே வையகோ ?
பத்தர்கட் சூழ்மயி லாபுரி வாழ்ஞான பானுவே
புத்தமிழ்தே வினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே. (௯)

சின்மயா னந்தனே தேவர் களுக்குட் சிறந்தவா
என்னை நிகரொரு பாபியு மேழையு மெங்குளார்
தன்னலம் போலினிக் கும்மயி லாபுரி கர்த்தனே
புன்மை நிறைவினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே. (௰)

எங்கும் பரவெளி யெங்குஞ் சிவானந்த மெங்குமே
மங்காத மெய்யொளி கண்டவர்ப் பேரின்ப வாழ்வுற்றார்
தங்கநற் றொண்டர்கள் சூழ்மயி லாபுரி சுயம்புவே !
பொங்கும் வினையதை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே, (௰௧)

ஆரணம் போற்றி யருட்செயு மூர்த்தியே ஆதியே !
காரண கார்யங் கடந்தவர் காணுமக் கண்ணனே !
தாரணி யாவும் பணிமயி லாபுரி தற்பரா !
பூரணா! வூழ்வினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே. (௰௨)

எள்ளுக்கு ளெண்ணெ யெனகலந் திலகு மீச்சுரா
கள்ள மனத்தினா லுன்றனின் பொன்னடிக் காண்பனோ ?
தள்ளாம லாள்மயி லாபுரி வாழ்ஞானத் தாயகா
பொள்ள னிறைவினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே (௰௩)

சீத மதியனே ! செக்கர் வேணியனே ! தேசுயர்ப்
பாதங் கதியன்றி வேறொரு துணையும் பற்றிலேன்
ஆதவன் போல்மயி லாபுரி வாழ்சிவ வண்ணலே
பூத மலைவினை நீக்கியா ளுன்றாட்குப் புண்ணியமே. (௰௪)

காத லாகிக்கசிந் தேத்தினர் மாயைக் கடந்தனர்
பூத மைந்தும் பொறி யாவு மடங்கிப் புகழ்பெற்றார்

பாதகந் தீர்த்திடு மாமயி லாபுரி பரமனே!
போத மிலாவினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே. (௰ரு)
கட்புல னோர்ந்தை யொடேக்கிய ஞானங் கலந்தவ
ருட்புறம் பென்பவை ரெண்டு மொன்றாக வுரைத்தனர்
நட்டம்புரி மயி லாபுரி வாழ்சிவ நாதனே
§ புட்டக மாம்வினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே (௰௬)
காரண காரிய மியாவுங் கடந்தக் கடவுளே
காரண ளாகிய நந்திமேல் வந்தரு ளாயகா!
பாரனைத் தும்பணி மாமயி லாபுரி பணணவா
பூரணா! ஆழ்வினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே. (௰எ)
ஆசையா யன்பர் தினமலர் சாத்தி யர்ச்சித்து
பூசைசெய் தக்கர மோதி வெண்ணீறிட்டு போற்றிசெய்
தேசுயர் மாமயி லாபுரி மன்னுந் நிர்னேதயா
பூசுரா ஆழ்வினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே. (௰அ)
எண்ணிலா கோலங்கொண் டெங்கு நிறைந்த மஹேசனே!
கண்ணிலான் போலக் கலங்குமிப் பேயனைக் காத்தருள்
பண்ணிசை யந்தணர் வாழ்மயி லாபுரி பரமனே!
புண்படு முன்வினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே. (௰௯)
காற்றி லலையுந் துரும்பென வாடி கணணீர்ந்ந்தி
சாற்று முறையதைக் கேட்டா தரித்தாட் சரணமே
சிற்றமி லல்லோர்வாழ் மாமயி லாபுரி திகம்பரா!
போற்றினே னாழ்வினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே.
இகபர சாதனை யாவுக்குந் தலைவனே எம்பரா!
சுகசத் வனே மயிலா புரி விளங்குஞ் சூக்மயா!
திகழ்பவனே! சிவப்ரகா சன்பணி சின்மயா!
புகலொணு ஆழ்வினை நீக்கியா ளன்றாட்குப் புண்ணியமே. (உக)

§ பூட்டகமென்பது புட்டகமென கடைக்குறைவாயிற்று

---

## அரஹர சிவசிவமாலை.

### காப்பிய கலித்துறை.

புரமூன் றெரித்த புனிதனே யாவும் புரந்தவனே
கரத்தினில் பிரமன் சிரமதை யேந்தியக் கர்த்தனே
வரந்தந் தடிமை யின்னலைப் போக்கிவாழ் வருள்வாய்
அரவோம் சிவவோ மாஹா சிவசிவ வற்புதனே.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

——§——

பூரணமா யெங்குநிறைப் போனக ஞானகமே
புத்திகடு மத்தியினிற் சத்துசித்து புகலுங்
காரணமெலாங் கடந்தோர் காணு மானந்தமெனக்
கலந்தசுகார் ஜிதவடிவே கங்கை வேணியனே!
தாரணியின் பொய்ச்சழக்கைத் தாண்டினவர் ஞான்றுந்
தாவிதொழ வரமளித்த சம்போவோம் சங்கரனே!
ஆரணங்கட் பலவகைசொ லப்பனே! கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே (௧)

மங்கையுமைப் பார்வதியும் மயிலுருகொண் டேத்தி
மாண்புபெற மகிமைசெய்த மாசிலாமா மணியே!
துங்கமிகு மாப்தர்களுந் தொழும்புசெய் தொண்டர்களுந்
துதிமறவர்ப் படியேத்த கடைக்கணித்த பரனே!
திங்கட்சடை யுடையவனே! தீனர்தயா நிதியே
செப்பவல்லா ரெவருளரோ திவ்ய மஹத்துவத்தை
அங்கையினில் மழுவுடையா யப்பனே! கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௨)

சோதியினுட் சுடரொளியாய்த் துலங்கிடு மாதிபனே
தொண்டர்களின் றுதியேற்று துணைசெயுந் துத்தியமே
பேதிக்கு மனச்சகடைப் பேயின்வயப் பட்டு
பித்துகொண்டு மாய்கையினுற் பெரிதுணரா திழிந்தேன்
வாதிக்கும் பலசமயம் போரகன்று வுன்றாள்
வணங்கிதொழ வரந்தந்திடின் மாயுமென்னூழ் வினைகள்
ஆதிக்க மானவனே அப்பனே! கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௩)

கூற்றனை யுதைத்தவனே கும்பிட்ட முனிசேய்
குணமடைய விக்கமதிற் றேன்றியநின் மஹத்வம்
சாற்றுவ ரியார் மிகவரிதே சங்கற்ப வாசனையிற்
றமோறி கிடப்பேனைத் தாமதிக்கா தாள்வாய்
போற்றினவர்ப் புகழடைந்தார் புகலுந்தேவ ராஜர்
பொய்யினிற் றமோறும் புலையேன்பெருங் கோலைஞன்
ஆற்றிலலைத் திரும்பானே னப்பனே! கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே; (௪)

கருணைநிறைக் கடவுளுன்போற் காணவேறிங் குளதோ?
காமனையுங் காலனையுங் கடந்தோருள்வாழ்க் கண்ணே!
இருவினைக ளவையகன்ற யேகாந்த நிலையி
விருப்பவரே சிவமுத்த ரொத்தவமும் வேண்டார்
பெரும்பயனே பாக்கியமே பிறப்பிறப் பிலானே
பிஞ்ஞகனே! சத்யகுணம் பிரியா பாந்தவமே
அரும்பொருளே! யாதிபனே அப்பனே! கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௫)

இன்பதுன்ப மிவையொன்றாக வெண்ணுங் குணத்தினரே
யெப்பற்று மின்றிசுக மெய்திமுத்தி யடைந்தார்
கன்மனத்தேன் கபடுடையேன் கற்றுமறி வில்லாக்
கசடன்றுயர்க் கடந்திடினே காணுஞ் சுயம்ப்ரகாசம்
நன்மனத்தோர் நாளும்வழா தேத்திமுத்தி யடைந்தார்
நாயினுக்குங் கேடான நாயேனெங்கு பிழைப்பேன்
அன்னையென வாதரிக்கு மப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௬)

கற்பனையெலாங்கடந்த கர்த்தனே! கடவுளே!
கற்பகமே! விற்பனமே! கைநிறை பாக்கியமே!
சற்பனை யென்பதுவேண்டா சர்க்குண ராலயமே
தகத்தக் காயச்சுடரே! சமரச மெய்ஞ்ஞான
பொற்புயரு மானந்தமே பூத்தழியாப் பூவே
புண்ணுன கடமெடுத்தே போக்கினேன் காலமதை
அற்புதனே! சிற்பரனே! அப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௭)

தீனர்க டயாபரனே! செங்கண்மால் விடையாய்
தீங்கனியே கற்கண்டே கணுவிலாச் செங்கரும்பே!
வானவருந் தானவரும் வருந்தி யருகிருந்து
வாழ்த்திசிரந் தாழ்த்திகரங் கூப்பிதொழும் வள்ளலே!
மோனமணி பெட்டகமே மூர்த்தியே லட்சணமே
முழுதுணர்ந்து கலந்திருக்க மூடனரியானென் னறிவேன்
ஆனதெலா முனதுமய மப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௮)

நீண்டசடை யுடையவனே நிகரொருவ ரில்லா
நித்தியனே! சத்தியனே! சித்திபுத்தி பத்தி

வேண்டியவர்க் கநுக்ரஹித்த வித்தக துத்தியனே
வேதமெல்லாம் பலபொருளாய் விளம்ப வகுத்தவனே
தூண்டாத மணிவிளக்கே! தூண்டின் மீனெனவே
துகளடைந்து தவிக்கின்றேன் றுணைசெய்வதுன் பரமே
ஆண்டவனே! அரும்பொருளே! அப்பனே கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௧)

இகபரசா தனையருளி யேழையனு கேட்டு
யிதங்கிடினே பெரும்புண்ய மிறையே பிழைத்திடுவேன்
சுகதுக்கம் பிறப்பிறப்பு தோற்றமுட னொடுக்கஞ்
சொந்தமன் னியமென்னுந் தொடர்புக ளில்லானே!
செகமெச்ச நாட்கழித்தே சிந்தையாவுந் தெரிவாய்
செய்வதொன் று நினைவதொன்றாய் சேர்ந்தவை பொய்யலவே
அகமெனுஉ மிருதயமவா ழப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௰)

கலங்கிய சலந்தனிலே காண்பவரியார் வதனங்
கன்மமது நிறைந்திருக்க காணுமோ நின்னுருவம்
புலனவை யொன்றாய்நிறுத்தி புத்திசித்த மதிலே
பூரணா னந்தநிலை யாய்ந்தறிவா ரறிவோர்
மலமதனை சேர்த்திறுக்கி வைத்துழைத்தக் கொடியன்
வல்லவனோ? நல்லவனோ? எல்லாரினுங் [illegible]யன்
அலங்கார வழகுடைய வப்பனே! [illegible]லீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோ[illegible] ஹரஹரவோம் சிவமே. (௰௧)

மன்னுமறை யனந்[illegible]தம் வகுத்துரைக்குந் தேவே
வஞ்சமற்ற மனத்தவருண் மணக்குஞான மலரே!
சொன்முடிவே! சொச்சொரூப சுத்தசை தன்யமே
தொந்தபந்த மொன்றுமில்லா சூக்ஷமமே சாட்சியமே
சின்மயா னந்தகுருவே தீண்டா மேனியனே
* சிவஞான சுவாமிசீர்மை செப்பும் ஸ்லோகசிறப்பே
அன்புதவ மருளிக்காக்கு மப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௰௨)

## * சிவஞான சுவாமிகள் பிரபந்தம்.

[சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு.]

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசாதன் மதலே தாபித் தேத்தலிற்

கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனாது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுக்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செருத்துயிர் பருகலி
னவுணர் மூப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மானுட மடங்கலை வலிதபச் சோறலின்
மாயோன் மகவே வாகிய காலைத்
தடமுலை தினைத்துச் சாத்தனைத் தருதலி
னூழ்கடல் வரைப்பி னுன்றோ றநேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
[illegible]ப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ [illegible]ந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாத[illegible] கைதம் பித்தலின்
மூப்புர யிறுப்புழி முகுந்தட் [illegible]த்தேன்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

## சைவாகம வேதஸ்லோக பத்தியம்.

### சூதஸம்ஹிதை.

" உமார்த்த விக்ரஹாசுத்தா, த்ரிணேத்ரா சந்த்ரசேகரா, நீலக்ரீவா பாரகந்தா, ப்ரமோர்தா தாண்டவப்ரியா, ப்ரஹமா விஷ்ணு மஹாதேவை ரூபாஸ்ய குணமூர்த்திபி " எனவும்

ஜாபால்யுபநிஷத்து.

" ஸர்வஜ்ஞ பஞ்சக்ருத்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வர ஈச : பசுபதி, சேபச்வ இதிபுநஸ் ஸசமுவாஸ, ஜீவா : பசவஉந்தா, தத்பதித்வாத் பசுபதிஸ் ஸபுநஸ்தம ஹோவாச, கதமஜீவா: பசவஇதிகதம், தத்பதிரிதி ஸமுதவாச யதாதருணசிநோ விவேகஹீநா பரப்ரேஷ்யா, க்ருஷ்யாதிகர்ம ஸங்கியுக்தாஸ் ஸகலது கஸஹாஸ் ஸ்வஸ்வாமி பத்யமாநா, கவாதய: பசவ: யதாதத்ஸ்வாமிநஇவ ஸர்வஜ்ஞ ஈச ; பசுபதி " எனவும்

பஸ்மஜாபால வுபநிஷத்து.

" பசுபாச விமோசக : பசவச் சாவாநவக்தம் ருஷயச்சாம்பவா : பாசுபதா மஹாசைவா, வேதாவதம்ஸ்ம, சைவம், பஞ்சாக்ஷரஜபம், தஸ்தாரகம், ப்ரணவம் மோதமாநாஸ்திஷ்டந்தி, தக்ஷிணாயாம்திசி விஷ்ணு: க்ருத்வைவ மூர்த்தஞ்சலி முபாஸ்தே " எனவும்

சுருதி

" ஆத்மாநம் பரமாத்மாநம், அந்தராத்மாந மேவச, ஜ்ஞாத் வாத்ரிவித மாத்மாநம், பரமாத்மாந மாச்ரயேத், அந்தராத்மா பவேத் ப்ரஹ்மா பரமாத்மா மஹேச்வர : ஸர்வேஷா மேவபூதாநாம், விஷ்ணு ராத்மாஸநாதந "

" அத்வைதம் பரமாநந்தம், சிவம்யாதிது கேவலம், அதிஷ்டாநம் ஸமஸ்தஸ்ய, ஜகதஸ்ஸத்ய சித்கநம் " ப்ரஹ்மம், பசுபதி பரமாத்மா, பரம் சிவம் சம்பு "

" ஸ்வயம் தஸ்மாத் பசுபதிஸ் ஸம்பபூவ " பரமாத்மாதேவதா பசுபதி, ஸஜ்யோதி பசுபதி, ஸ்வயம்பசுபதி, புமான் " எனவும்

சூதஸம்ஹிதை சிவமாத்மீயகாண்டம்.

" எதானி தீர்த்தானி புரோஹிதானி வேதேஷு சாஸ்த்ரேஷு சிவாகமேஷு, தந்த்ரோக்தேண ப்ரகாரேண, தேவதாயா ப்ரதிஷ்டிதா ஸாபிநித்யம் ஸுஸேவ்யாச பூஜநீயாச வைதிகை, சுத்தமேவஹி ஸர்வத்ர தேவதாரூப மாஸ்திகா ; " எனவும்

பஸ்மஜாபால வுபநிஷத்து.

" பசுபாச விமோசக : பசவச்சா மாநவாந்தம் "

" ருஷயச் சாம்பவா: பாசுபதா மஹாசைவா வேதாவதம்ஸ்ம் சைவம் பஞ்சாக்ஷரம் ஜபம், தஸ்தாரகம் ப்ரணவம் மோதமாநா ஸ்திஷ்டந்தி தக்ஷிணாயாம்திசி விஷ்ணு: க்ருத்வைவ மூர்த்தஞ்சலி முபாஸ்தே " " வ்ரதமேதத் பாசுபதம், பசுபாச விமோக்ஷாய " எனவும்,

இவைமுதலாய சுருதிகளால் சிவமே யாவுக்குந் தலைமையெனச் சொல்லாதமையும். மற்றவை குருமுகத்தால் வேதாராய்ச்சியினுல் தெரிதல் வேண்டும்.

—§—

தொண்டரறுபான்மூவர் தோத்திர த்ரிநேத்திரனே
சொல்லரிய சொன்முடிவே சுழுமுனையி னொளியே
கண்டதெல்லாங் கண்மயக்கங் கபடக நாடகமே
கருத்தினுள்ளே கருத்தனென கருத்துரைக்குங் கருத்தே
பண்டைவினை யொழிந்தவரே பரமாத்ம ரூபமதைப்
பார்த்தனர்காண் பார்த்திருப்பார் பாரார்வேறு பொருளை
அண்டினரை யாதரிக்கு மப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௰௩)

வருந்திக் கண்ணீர்ப்பாய வணங்கித்தொழுந் தொழும்பர்
மாசற்ற மனத்தினராய் வரம்பெற்று வாழ்வடைந்தார்
மருந்தினுக்குந் தெய்வப்பணி வணக்கநல்லோர் ஸ்நேகம்
வாய்மைநெறி குருபக்தி வாய்த்திலையென் செய்வேன்
பொருந்திமன நிட்டைசெயப் புலையேனெங்ஙனுணர்வேன்
போற்றியெனப் போற்றிசெய வருள்வாய்ஞான வமிழ்தம்
அருந்தினவ ரானந்தங்கொளப்பனே! கபாலீச்சுரனே!
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௰௪)

எங்குமிலிங்க மாகிநின்ற விறையே பரத்துவனே!
யெல்லாமாய் நிறைமகிமை யெழிலுடையர்த் தெரிவார்
சங்கையறத் தெளிந்தனர்காண் சற்குருவி னருளாற்
றங்கமென வுளத்தில்மன்னுஞ் சம்போ சதாசிவமே!
கங்கையணி சங்கரனே! கடையேன் சிவப்ரகாசன்
கனிந்துவுளம் பணிந்துசொலுங் கவிமாலைச் சூடியரு
ளங்கையினில் மழுவுடைய வப்பனே! கபாலீச்சுரனே
அரஹரவோம் சிவசிவவோம் ஹரஹரவோம் சிவமே. (௰௫)

—※—

## வேண்டன்மாலை.

### காப்பிய கலித்துறை.

காணும் பொருளெலா நிலையென நினைத்துக் காதலுற்றேன்
மாணுயர் மலரடி வாஞ்சித்துப் போற்று மார்க்கமில்லேன்
சேணுலகா மயிலாபுரி யீசனே! சிந்தை வைத்து
வீணனுக் கிரங்கி கலந்தர ஞான்றும் வேண்டினனே.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.
பண் - இந்தளம்.

—0—

மன்னுமெய்ஞ் ஞான வாழ்வே ! மஹனிய வேத்து நாதா
என்னைப்போ லேழைப் பாவி யிருநிலத் துளரா யெண்ணேன்
பொன்னுமண் பெண்மூ வாவசப் போக்கினு ளின்ப முற்றோர்
மின்னுநன் மயிலை யீசா வீணனுக் கிதங்கு வாயே. (௧)

மதியினால் விதியை வெல்ல மருந்தாமைந் தெழுத்து நீறு
துதிநிறை சலமும் பூவுந் தூபவர்ச் சனையுந் தோத்திரம்
பதித்துவ மருளு மென்பார் பற்றெலாந் தொலைத்த மேலோர்
விதித்தவிர் மயிலை யீசா! வீணனுக் கிதங்கு வாயே (௨)

தஞ்சமுன் பாதந் தன்னை சகடையா னினைத்து ஞான்றும்
மஞ்சுரு வாகப் பரடி மனங்குவித் தொருமை யாகா
திஞ்சித்தின் மர்க்க டம்போ லிவணுதித் தென்னக் கண்டேன்
விஞ்சைசூழ் மயிலை யீசா! வீணனுக் கிதங்கு வாயே. (௩)

சமரச ஞான மின்றி தத்துவ சமயக் கொள்கை
யிமைமற வாபோ ராட்ட மிசைத்திடிற் சுகமெங் குண்டு
நிமைமற வாத நிட்டை நேடச்செய் புண்ணிய மப்பா
விமலனே மயிலை யீசா! வீணனுக் கிதங்கு வாயே. (௪)

பண்ணியத் தொழிலி லெல்லாம் பாபமே தலைமை யாச்சு
எண்ணுகே னெண்ணு வாவர யெதிருக்தம் பேசும் பொல்லேன்
வெண்ணீறு பூச கில்லேன் வெறிகொண்ட சுணங்க னுனேன்
விண்ணோர்சூழ் மயிலை யீசா! வீணனுக் கிதங்கு வாயே. (௫)

அடுத்தேனுன் பாதந் தன்னை யடியவன் மெத்த நாளாய்
கொடுத்திடும் வரமே தந்தாற் கும்பிட்டுப் பிழைத்துப் போவேன்
கெடுத்திடு மயலில் விட்டாற் கேடனெங் ஙனம் பிழைப்பேன்
விடுத்திடா மயிலை யீசா! வீணனுக் கிதங்கு வாயே. (௬)

பாட்டினாற் பயனுண் டென்றுப் பாடியே நாட்கழித்தே
யேட்டெலா நிறைய வைத்தே னிச்சைவிட் டொழிந்தே னில்லை
கூட்டையே கொழுக்கப் பார்த்தேன் குருநெறி சிறிது மில்லேன்
மேட்டிமை மயிலை யீசா! வீணனுக் கிதங்கு வாயே. (௭)

ஆண்டவா கடைக்கண் பார்த்து வடிமைசெய் வரம ளித்தால்
பூண்டயிம் மாயக் கோலம் போய்விடும் புனித னுவேன்
தூண்டிலின் மீன்போ லானேன் றுதிசொலுஞ் சிவப்ர காசன்
வேண்டினேன் மயிலை யீசா வீணனுக் கிதங்கு வாயே. (௮)

## மஹத்வ மஹேஸ்வர மணிமாலை.

காப்பிய கலித்துறை.

மஹத்வ சுகாதீத சிவஞான மூர்த்த வள்ளலென
மஹத்வ வற்புதக் கோலங்கட் காட்டி வரம்பலிக்கு
மஹத்வ திருத்தொண்ட ரேத்திட மகிழ்ந்து வந்தருட்செய்
மஹத்வ மஹேஸ்வர ஸ்ரீகபா லீசன்றாள் வணங்குதுமே.

## சமயாச்சாரிகளாகிய நால்வர் மகிமைச் சுருக்கம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பகாரியப் பிரணவ பஞ்சாக்கர சொச்சொரூப
பல்கோடி நாமமுடன் பார்த்தோர்தொழு மகிமை
இகபரசா தனையனைத்து மியற்றிநின் றவரவ
ரிருதயம்போ லளித்தவரோ டெழினடண மகிமை
புகலுமறை யனந்தவிதம் போற்றிதேவர்ப் பணிய
பூரணமா யியாவினுளும் புகுந்தொளிர்கு மகிமை
மஹனரியர்கண் மனமகிழ்ந்து வாழ்த்துந் திருமயிலை
மஹேஸ்வர கபாலீசன்றாள் வணங்கியின்ப மடைவாம் (௧)

எண்ணரிய கடவுட்கெலா மிறைவனியானென் றெழுந்து
யிம்மையம்மை மும்மையிலுஞ் செம்மைகொண்ட மகிமை
பண்ணிசையால் மாண்டவுயி ரெழுந்து துதிசெய்ய
பலிதமூற்று புனலதனி லேடிட்டு சைவமய
வெண்ணீ றெங்கனுந்துலங்க வெகுளிச்செய்தோர்க் கழுவில்
வேந்தனுல் மாய்ந்தலர விதித்தநேர்மை மகிமை
மண்ணும்விண்ணுந் தொழபலுரு வாய்ந்துகந்த மயிலை
மஹேஸ்வர கபாலீசன்றாள் வணங்கியின்ப மடைவாம். (௨)

ஓலையது கனலிற்பொன்னு யுற்பவித்த மகிமை
யுடலைசுட்ட சாம்பற்பெண்ணு யுதித்தபெரு மகிமை
காலனென வந்தநோயை யகன்றுகவி பாட
கடும்விஷமு மமுதமாகக் கனிவுகொண்ட மகிமை
ஓலமிட்டு சமணரோட யானைகொல்ல கருங்க
லுலகம்போற்ற தெப்பமென வுயர்வுகொண்ட மகிமை
மாலகன்ற மனத்தவர்கண் வாழ்த்துந்திரு மயிலை
மஹேஸ்வர கபாலீசன்றாள் வணங்கியின்ப மடைவாம். (௩)

ஆண்பனைப்பெண் பனையாகவு மரசனின் கூனிமிர
ஆரூரர்க்காய்ப் பரவையர்பா லிரவிற் றூதுசெல்ல
வேண்டுவேதை யளிப்பதைப்போற் செங்கல்லும் பொன்னாக
வியன்முதலை யுண்டபிள்ளை வெளிவர வணிகனும்
மாண்டெழுந்து நம்பிவந்த மங்கையை மணந்ததும்
மன்னனமண் பாழிகளை யிடித்து தூர்த்தினதும்
மாண்புடைய மகிமைகண்டோர் வாழ்த்துந் திருமயிலை
மஹேஸ்வர கபாலீச்சன்றாள் வணங்கியின்ப மடைவாம். (௪)

குதிரைவாங்குந் தனத்திற்கோயில் முடித்து கும்பிட்டதுங்
கொற்றவன்முன் காட்டிலுள்ள நரிகட்பரியானதும்
எதிர்படுந் தேசிகனாகிவந் தெழின்மறை யெழுதியு
மீந்தபிட்டு தின்றுமண் சுமந்தங்கன் மறைந்ததும்
பதித்துவம் விளங்கபுத்த ரூமையாகப் போனதும்
பாராண்டோன் மகள்மூகைத் தீர்ந்துபதில் சொன்னதும்
மதிசிறந்தோ ருணர்ந்துவலம் வந்துதொழு மயிலை
மஹேஸ்வர கபாலீசன்றாள் வணங்கியின்ப மடைவாம். (௫)

## அடியார் மகிமைச் சுருக்கம்.

அனித்தியவாழ் வகன்றுவுடற் பொருளாவி மூன்றையு
மர்ச்சனையா யளித்தன்பரை சிவமென பூசித்து
தனித்துவமாய் கோயிற்குளம் மடங்களன்ன சாலை
தானமைத்து அடியர்க்கமு தூட்டிபாதம் பணிந்து
கனிவுகொண் டொருநிலையு மறவா நீறுபூசி
கண்மணியா மக்கம்பூண்டு வைந்தெழுத்தை யோதி
மனிசரெல்லாந் தெய்வமாக வந்துநிறை மயிலை
மஹேஸ்வர கபாலீசன்றாள் வணங்கியின்ப மடைவாம். (௬)

சாய்ந்தலிங்க மதுநிமிர சமணையழித் தரசு
தான்புரிய நீலகண்ட மெனுஞ்சொல்லால் தூர்த்தொழிய
ஆய்ந்தசக்க ணதன்ரகஸ்ய மந்தணன்கண் டேத்திடவும்
ஆண்மகவா மிந்திரிய மடக்கிகாட்சி யடைய
தோய்ந்தபக்தி யால்பழம்பெற் றிறுதிமுத்தி சேர்ந்ததுஞ்
சுத்தசித்தர் மூலனெனத் தோன்றிமந்த்ரஞ் சொன்னதும்
மாய்ந்து பிறவாவரந்தந் தாளுந் திருமயிலை
மஹேஸ்வா கபாலீச்சன்றன் வணங்கியின்ப மடைவாம். (எ)

பஞ்சபூதம் வயப்படவே பணிந்து மலர்சாத்தி
பகருமந்த்ர மோதிதிருப் பணிபுரிந்து பாடி

விஞ்சைபெற்ற வறுபத்து மூவரில் நந்தனென
 விளங்குத்திரு நாளைப்போவார்த் தனைசுவைசேர்க் கனிபோ
லெஞ்சாது வுண்டதென் யெழில் திருவள்ளுவரி
 னிசையுடற் பொன்னுனமற்று மேத்தி சிவப்ரகாசன்
மஞ்சருவாய்க் கனிந்துதொழு மறையோர்வாழு மயிலை
 மஹேஸ்வர கபாலீசன்றாள் வணங்கியின்ப மடைவாம். (அ)

கருத்துறை.

அறுபத்து மூவ ரருளன்பு பக்தி வாசாரமும்
அறுபத்து நான்கு திருவிளை யாடலு மரன் மகிமை
அறுபத்து நான்கு கலையுஞ் சைவாகம மறிந்தவர்கள்
அறுபத்து நான்கி லுளஞானப் பாலுண் டானந்திப்பரே

சரணத்துவிமணி.

அரனே! ஹரஹர சிவவோம் சிவசிவ அமலா திருசரணம்
பரம தயாளுவே பன்மறைக் காணு பானுவே திருசரணம்
வரம்பெறு மஹனிய ரடியவ ராப்தர்கள் வாழ்வே திருசரணம்
தரணி யெலாம்பணி ஸ்ரீகபா லீசநின் சரணஞ் சரண்சரணே. (க)

மாற்றிலாப் பொன்னே! மணியே ஞான மலரே திருசரணம்
நாற்றிசை யும்பணி நடத்த காட்சிதரு நாதா திருசரணம்
போற்றிசெய் திறைஞ்சுஞ் சிவப்ரகாசன் கவி புனிதா திருசரணம்
சாற்றும்பன் மஹத்வ ஸ்ரீகபாலீசநின் சரணஞ் சரண்சரணே. (ட)

வாழு விருத்தம்.

ஓங்காரப் பிரணவன்ஸ்ரீ ஜெயவிநா யகன்று
 ளுயர்பர கபாலீசன் கற்பக வல்லியுமை
தாங்குபுகழ் குமரகுரு கடவுள்மங்கை யிருவர்
 சமயகுரவர் தொண்டர் பயில்வேலும் வள்ளுவரும்
பாங்குடனே வாலயசீர்ப் பரவிதொழு மடியார்
 பவந்தீர்க்கு மௌடதமாம் திருநீறு ருத்ராக்கம்
நீங்காத பக்தர்கள்மெய்ப் புலவோரு மயிலையை
 நேடிவலஞ் செய்தோரிந்நூற் குதவினோர் வாழியவே.

—0—

சிவஞான மஹத்வ சுகத்வம் சம்பூரணம்.

ஓம்! நமப்பார்வதி பதயேநம: அரஹர மஹாதேவா

திருச்சிற்றம்பலம்.

ஜெகநாதபுரம்.
அ கா இரங்கசாமி பிள்ளை
கல்கத்தா பவானிப்பூர்
ஸ்ரீ கணநாத சபை
ஸ்தாபகர். சி ச. மாதவதாஸ்
கோ. கோதண்டசாமி பிள்ளை
பெ. கிருஷ்ணசாமி பிள்ளை
வீ. க. முனிசாமி பிள்ளை
க ந: வீ. த. பெருமாள் பிள்ளை
பா ஏகாம்பரம் பிள்ளை
பெ- தம்புசாமி தாசர்
வீ மு, தெருவீதி பிள்ளை
பிரம்பூர் ஏகாந்தவீதி
R M. முனிசாமி பிள்ளை
கநக்கரத்தர்மன் கோவில் வீதி
ஸ்ரீ சிவத்யான பஜனை ஸ்தாபகர்
வீ. நா. இராகுவேல் பிள்ளை
டாக்டர் சாமிநாயக்கன்வீதி
N. ஆளவந்தார் தாசர்
வ. குமாரசாமி பிள்ளை
செம்மநகர் சி. வெங்கடாசலம் பிள்
வீ. சண்முகம் பிள்ளை [ளை
கீழ்ப்பாக்கம் மேட்டுவீதி
ஸ்ரீ சிவானந்த பக்த பஜனை
ஸ்தாபகர் பொ. எ. மதுரை பிள்ளை
மூப்பர். பெ. மு. பாளையம் பிள்ளை
,, ஆ. செ. பொன்னப்பன் பிள்ளை
காரியதரிசி திருவன்பாக்கம்
காஞ்சிபுரம் திரு, வீ. சின்னத்தம்பி
உபாத்தியாயர் சம்பிரதி [பிள்ளை
சோதிடர் செ. ப சந்திரகாசம் பிள்
ஆலோசனைத்தலைவர் [ளை
செ, நா. இராகுவேலு பிள்ளை
விசாரணைத்தலைவர்
கு க முனிசாமி பிள்ளை
தண்டல் செ. கா. கதிர்வேலு பிள்ளை
பிள்ளை மு. குப்புசாமி பிள்ளை
கோட்டியாநகரி
B. திருசாஜலம் பிள்ளை
T, M. வேலு பிள்ளை
அமிஞ்சிகரை தே. முனிசாமிதாசர்
ஸ்ரீ விநாயக மஹோத்ஸவ சபை
மூப்பர் தே. மு. தம்புசாமி பிள்ளை

காரியதரிசி இர. தருமலிங்கம்பிள்ளை
அங்கம் ந கோ-சுப்ரமண்யம்பிள்ளை
அங்கம் மு. தங்கவேலு பிள்ளை
சேத்துப்பேடு
ச. மு. சிங்காரவேலு பிள்ளை
ச நாராயணசாமி பிள்ளை
அ. எசுராஜலு பிள்ளை
கு. வீ. சுப்ரமணியம் பிள்ளை
சி. தருமலிங்கம் பிள்ளை
செ. அ. தங்கவேலு பிள்ளை
திரு கி. மா. வே. கு. நடராஜ மூர்
கன்னிமாநகர் [த்தி
தன்மீகர்வா தெ. ஜெகநாதம்பிள்ளை
விஜய பெ ஆ. முருகேசம் பிள்ளை
ந. ஜான் திருவையா பிள்ளை
ஜோ. அந்தோனி பிள்ளை
பெ, இரத்தினவேல் தாஸ்
C. முனிசாமி பிள்ளை
கி. க. மு. நத்தானியேல்பிள்ளை
M. முருகேசம் பிள்ளை
தெ. க. புண்ணியநாதன் பிள்ளை
பொன்னுநகர்
ஸ்ரீ சிவசுப்ரமண்யதியான பஜனை
கிராமம். வெ பா, முருகேசம்பிள்ளை
இர பொன்னுசாமி பிள்ளை
து விஜயராகவலு பிள்ளை
அ. குழந்தைவேலு பிள்ளை
ஆற்காடு மு. மதுரை பிள்ளை
ஆ. பி ஆரோக்யசாமி பிள்ளை
ஸ்ரீ பாலசுப்ரமண்யாலயம் [ள்ளை
உபகாரியதரிசிதிரு ம. அப்பாசாமிபி
சென்னை பிரஜாநுகூலசங்கம்
காரியதருசி. த சின்னையா பிள்ளை
S. M. S. நாராயணசாமி பிள்ளை
சி. நல்லதம்பி பிள்ளை
ச. மு. எல்லப்பன் பிள்ளை
நுங்கம்பாக்கம் கிராமவீதி
பெ மா. அருணாஜலம் பிள்ளை
தி. சுந்தரம பிள்ளை
கொண்டிமாநகர்
கி. வீ. செ. தாமோதரம் [illegible]
அமீர்நகர் ச. முருகேசம் பிள்ளை
,, C K, T. மூர்த்தி

சாலேதேவனும்பேட்டை
ஸ்ரீசிவத்யானந்த சித்விலாச பஜனை
ஸ்தாபகர் இரா அ சண்முகம்பிள்ளை
A. தம்புசாமி பிள்ளை
P. நடராஜன் பிள்ளை
P. முனிசாமி பிள்ளை
F. முனிசாமிபிள்ளைஐஸ்மெர்சன்ட்
சி, கோவிந்தராஜலு பிள்ளை
வன்னிய தேவனும்பேட்டை
பொ, முருகேசப் பண்டிதர்
R. P. ஆலேபிள்ளை
M. அந்தோனி பிள்ளை
நல்லான்பதி. ப. முனிசாமி பிள்ளை
L. இரத்தினம் பிள்ளை
ஸ்ரீ கற்பக விநாயக பக்த பஜனை
ஸ்தாபகர் அ. அண்ணாமலே பிள்ளை
காரியதரிசி சு. முருகேசம் பிள்ளை
வேளாளத்தேவனும்பேட்டை
மு. மு. துரைசாமி பிள்ளை
R. முனிசாமி பிள்ளை
ஆயிரந்தீபநகர்
R. தம்பியப்பன் பிள்ளை
K. V. வீரராகு பிள்ளை
N. முனிசாமி பிள்ளை
கல்கத்தா ஸ்ரீ கணநாத சபை
ஸ்தாபகர் S P. இராவணன் பிள்ளை
துலுக்கன்தோட்டம்
L. S. பிரான்சிஸ் பிள்ளை
மக்கிமாநகர் ஏ. வீராசாமி பிள்ளை
" சோ. வீ. சபாபதிபிள்ளை
மக்கிமாநகர் ஆற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச
சித்தி விநாயக பக்த பஜனை
ஸ்தாபகர் வீ. ஐயாக்கண்ணு பிள்ளை
மூப்பர் அ. பொன்னரங்கம் பிள்ளை
தண்டல் இர பொன்னுசாமிபிள்ளை
பிள்ளை மு. குப்புசாமி பிள்ளை
மவுண்ட்ரோட் ஜேசன்ஸ்வீதி
ஸ்ரீ சிவப்பிரகாச சுந்தர ஞான
பக்தாமிர்த பஜனை ஸ்தாபகர்
கிராமம் ஏ. மா. தங்கவேலு பிள்ளை
உபாத்யாயர் பெ. வா[illegible] பிள்ளை
[illegible] மு. அண்ணாமலே பிள்ளை
மூப்பர் மா. முருகேசம் பிள்ளை

தர்மகர்த்தர்
சோதிடர் கா. சி. முனிசாமிபிள்ளை
காரியத்தலேவர் இர. சிதம்பரம்பிள்ளை
உபகாரியத்தலேவர்
மு. வரதராஜலு பிள்ளை
ஆலோசனைத்தலேவர்
ந. ஐயாக்கண்ணு பிள்ளை
பொக்கிஷர் மா, பொன்னுசாமி பிள்ளை
ஸ்ரீ சிவசன்மார்க்க திருப்பணி
பரிபாலன சபை
ஸ்தாபகர் சா. சிங்காரம் பிள்ளை
ஆலோசனைத்தலேவர்
பொ. மு, மதுரவாசகம் பிள்ளை
கிருஷ்டப்ப செட்டிவீதி ஸ்ரீபால
சிந்தாமணி விநாயக பக்த பஜனை
ஸ்தாபகர் பெ. சின்னசாமி பிள்ளை
காரியதரிசி மொ. முருகேசம்பிள்ளை
உபாத்யாயர்சி சுப்ரமண்யமபிள்ளை
ஆல்தோட்டம்
ஸ்ரீ சிவகணேச பக்த சபை
அழர்தகவி இரா. பொன்னுசாமிபிள்ளை நீலகிரி
வீ. வடிவேலு பிள்ளை
க. தம்பியப்பன் பிள்ளை
ஏ. இராஜகோபால் தாசர்
செ. மாணிக்கம் பிள்ளை
மு. காளி பிள்ளை
து. வாசுதேவ மூர்த்தி
வி. ஏ. சுப்ரமண்யம் பிள்ளை
பொ. வீரராகவலு பிள்ளை
ப. சுதானந்தம் பிள்ளை
ஸ்ரீ நடராஜ பக்த பஜனை
பொ. மு. நடேசம்பிள்ளை என்கிறவர்
மு, கிருஷ்ணசாமி பிள்ளை
மா. உலகநாதம் பிள்ளை
ஷேபூர் அ. பொன்னம்பலம் பிள்ளை
சப்ளேயர் ஏர்தூர் ப. முனிசாமி பிள்ளை
சி. மு. நாராயணசாமிபிள்ளை
ஐ. மா, தங்கவேலு பிள்ளை
ஏ, வீ. முனிசாமி பிள்ளை
த. [illegible] மூர்த்தி
இராயப்பேட்டை
இல. இர. முருகேசம் பிள்ளை
த. இர. கணபதி பிள்ளை

R, D. M. ஐயர்
ஸ்ரீ சிவப்ரகாச பக்த பஜனை
திண்டிவனம் கொள்ளாறு, செய்குப்பம் ஸ்ரீசிவப்ரகாச சித்திவிநாயகர் ஆலயம், கல்விச்சாலை, மானேஜர்
ஸ்தாபகர் கோ பூங்காவனம்பிள்ளை
ஐ, க வீ தமபுசாமி பிள்ளை உரிகம்
காட்டுக்கோவில் சந்தவெளி வீதி
மூ சீராளன் பிள்ளை
P M. நடேசதாஸ்
துயப்பேட்டை வீரபெருமாள் வீதி
உபாத்யாயர்மு. முருகேசம்பிள்ளை
(Mechanical, Govt.)
டைகிராப்வீதி P சின்னசாமிபிள்ளை
ஸ்ரீ வல்லாள கணபதி பக்த பஜனை
ஸ்தாபகர் ஆ.வ. இரத்தினகந்தமூர்த்தி
தன்மீகர் A. டேவிட்பிள்ளை
மூப்பர் ம. பெருமாள் பிள்ளை
நடியேத்தம் M. முனிசாமிபிள்ளை
டிமாண்டுவீதி V. R. முனிசாமி பிள்ளை
அடையாறு கிராமவீதி
ஸ்ரீ சித்திகணேச பக்த பஜனை
ஸ்தாபகர் சி. முருகேசம்பிள்ளை
பிள்ளை ம. உலகநாதன் பிள்ளை
ஸ்ரீ வேத விநோத விநாயக பஜனை
ஸ்தாபகர் க. குப்புசாமி பிள்ளை
மூப்பர். ப. முருகேசம் பிள்ளை
ஆலோசினைத்தலைவர்
வே, கி வரதராஜலு பிள்ளை
பிள்ளை ம. மதுரை பிள்ளை
" இர, மு. தனவேலுபிள்ளை
அடையாறு வ வ. சிங்காரம்பிள்ளை
" வே. சண்முகம் பிள்ளை
" பொ. செல்லப்பன் பிள்ளை
" K ஆண்டவ மூர்த்தி
கின்னரவித்வான் பாலையம் பிள்ளை
கோட்டூர் ஸ்ரீ சுந்தர கணேசபக்த பஜனை மூப்பர்மு.பத்மநாதம்பிள்ளை
காரியதரிசிவீ இராஜகோபால்பிள்ளை
அர்ச்சகர் அ. இரங்கசாமி பிள்ளை
நாராயணசாமிதோட்டம்
கிராமம் வ ஏகாம்பரம் பிள்ளை
உபகிராமம் வ. கோவிந்துபிள்ளை

ஸ்ரீ சிவகணேச சண்முகானந்த தியான பஜனை
ஸ்தாபகர்ஐ. க. மாசிலாமணிபிள்ளை
தன்மீகர், பொக்கிஷர்
M, V, சண்முகம் பிள்ளை
காரியதரிசி V. M. இராஜு
சம்பிரதி M. சாமிநாதன்பிள்ளை
ஆலோசனைத்தலைவர்
தி, துரைசாமி பிள்ளை
மூப்பர் A, வடிவேலு பிள்ளை
ஸ்ரீ விநாயக மஹோத்ஸவ சபை
மூப்பர் கோ. முனிசாமி பிள்ளை
P. M. சரட்டு பிள்ளை
பா. கணேசன் பிள்ளை
A. வேலாயுதம் பிள்ளை
இராபர்ட்சன்பேட்டை
க. முருகேசம் பிள்ளை
திருமயிலை மேட்டுவீதி
தா. பொ. முருகேசம் பிள்ளை
செ. பெ. இராஜு பிள்ளை
ஸ்ரீ சிவகணேச பக்த பஜனை
ஸ்தாபகர் தா. பொ. கந்தசாமிபிள்ளை
மு. இராஜு பிள்ளை
கோன்றைமாநகர்
மயிலை வே. பொன்னுசாமி பிள்ளை
" K C. வெங்கடாசலம்பிள்ளை
வாலாஜாபேட்டை
அ. அண்ணாமலை தேசிகர் கண்ட்ராக்டர்
மீர்சாயபுபேட்டை
ஸ்ரீ சதுர்த்தி விநாயக சன்மார்க்க பக்த பஜனைத் திருக்கூட்டத்தார்
நரசிங்கபுரம்
ஸ்ரீ சிவஞான பக்தஜன சபை
ஸ்தாபகர் பெ. இரத்னசாமி பிள்ளை
காரியதரிசி நா. முனிசாமி தேசிகர்
பொக்கிஷர் வீ.சுப்ரமண்யசிவம்பிள்ளை
திறவுகோலர்பொ. சி,முனிசாமிபிள்ளை
சம்பிரதி அ. பொ இராகவலுபிள்ளை
அர்ச்சகர் மாணிக்கவாசகம் பிள்ளை
ஆலோசனை M. முனிசாமி பிள்ளை
திறவுகோலர் D மதுரநாயகம்பிள்ளை
உதவி " ஆ.சுப்ரமண்யம்பிள்ளை
அங்கத்தினர். க. முனிசாமி பிள்ளை

தண்டல் பொ. கேசவலு பிள்ளை
நரியமாநகர் மு. ஆறுமுகம் பிள்ளை

புதுப்பேட்டை

வித்வான் சி இஷ்டலிங்கம்பிள்ளை
பாலகவி அ. ந. முருகேசம் பிள்ளை
வெ, கங்காதரம்பிள்ளை டிரைவர் S
அ. கதிரேசன் பிள்ளை [I. R.
கோ. கந்தசாமிபிள்ளை என்கிரேவர்
சு, முருகேசம் பிள்ளை
எழும்பூர் சு- செ. மாணிக்கம் பிள்ளை
" N. பச்சையப்பன் பிள்ளை
" வி. சுப்ரமண்யம் பிள்ளை
" L R. கோபால் பிள்ளை

சிந்தாதரிப்பேட்டை

ஸ்ரீ துயர்தீர்த்த விநாயகராலயம்
திருப்பணி செ தருமலிங்கம்பிள்ளை
" எ: சி: சண்முகம்பிள்ளை
அ, மு. தங்கவேலு சாமியார்
பாலசங்கீத T.R. தியாகராயபிள்ளை
மேட்டுவீதி P: சுப்ரமண்யம்பிள்ளை

புளியந்தோப்பு

கா. சின்னமதுரை பிள்ளை
நெட்டால் ஸ்ரீ சித்தி விநாயக சிவசாதன தவசிங்க் ஸ்தாபகரும், புரசைஸ்ரீபாலசிந்தாமணிவிநாயகாலயஸ்தாபகாதீனருமாகிய சைவ திரு சி வீ பாலகிருஷ்ணம் பிள்ளை
காரியதரிசி சி. வீ. பாபு பிள்ளை

வியாசர்பாடி

ஸ்ரீ சிவஞான சுந்தர சித்விலாச பக்த பஜனை ஆசிரியர்
புராண. மு. சிவசுப்ரமண்யம்பிள்ளை

பெரியமேட்டு.

திரு. R. S வாதராஜலு பிள்ளை
பி இராகவன் பிள்ளை
பூவை- ச. இரங்கசாமி பிள்ளை

மண்ணடி சவரிமுத்துவீதி

திருப்போரூர் வள்ளுவகீர்த்திரத்தின் தலைவர். வீ. முத்துசாமி பிள்ளை
செ. அருணாசலம் பிள்ளை
T. மாணிக்கம் பிள்ளை
காசிமேடு சின்மயானந்த பஜனை
மூப்பர். இரா. சுப்ரமண்யம் பிள்ளை

இராயபுரம் கமிற்றுகிடங்கு இந்து பக்த பால்ய சபை

க வே. அர்ச்சுனன் பிள்ளை
சொ. சி பாலசுந்தரம் பிள்ளை
சி. கோவிந்தராஜலு பிள்ளை
வீ. பெருமாள் பிள்ளை
சு. சண்முகம் பிள்ளை
வ. இராகுவேலு பிள்ளை
ஸ்ரீ விநாயகமஹோத்ஸவ தலைவர்
வ. கோபால் பிள்ளை
ஷெடியூர்பு. வே. சாரங்கபாணிபிள்ளை
" பெ, முனிசாமி பிள்ளை

பிருங்காசைலம்

S. N வடிவேலுபிள்ளை (பம்பாயி
மாரீசன்வீதி மு, கைலாசம் பிள்ளை
டிரைவர் லயின் சமாசாரத்தாகரம்
C. K. மங்களேஸ்வரம் பிள்ளை
பூவை மு. வீ. பழனி பிள்ளை
செங்கற்பேடு தெ. முருகேசம்பிள்ளை
காஞ்சிபுரம்சொ.நடேசம்பிள்ளை [ளை
உரிகம்கிளப் P- சபாபதி பிள்ளை
துண்ணூர் ஜெனரல் சப்ளையர்
கிராமம் S. குழந்தைவேலு பிள்ளை
பண்டிதர் R. நாராயணசாமிபிள்ளை

நீலகிரி

இந்து ஆரியமத சித்தாந்த சபை
மூப்பர். B. சுந்தரம் பிள்ளை
சூப்ரென்டென்ட் ஸ்னேடன்
K. M. பாலகுமரு பிள்ளை
ப்ளவர் காட்டேஜ்
B. S. ஜெகநாதம் பிள்ளை
நீலகிரி இராயல் கன்பெக்ஷனரி
Y, ஆறுமுகம் பிள்ளை
Y. A நாராயணசாமி பிள்ளை
ஷாப்கீப்பர் G R- ஜேம்ஸ்பிள்ளை

நீலகிரி வண்டிசோலை

ஸ்ரீ ராமாநுஜ பக்த பஜனை ஸ்தாபகர் A. சாரங்கபாணி பிள்ளை
A. S. இராமச்சந்திரம் பிள்ளை
B. S. குருநாதம் பிள்ளை

இரங்கோன்

மு. கந்தசாமி பிள்ளை
மு. இரங்கசாமி பிள்ளை

75268
-600 008.

